# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

மே-ஜூன் 2025

ஆண்டு 5 ▲ இதழ் 6

விலை 250/-



**5 ஆவது ஆண்டு நிறைவில் நமது சஞ்சிகை**


பிரான்ஸிலிருந்து தமிழ் முழங்கும்


# தமிழ்நெஞ்சம்

**படியுங்கள்**
**பகிருங்கள்**

இணையத்தில் படிக்கலாம்
**tamilnenjam.com**
முற்றிலும் இலவசம்







நீங்களும் எழுதலாம்
e-mail :
editor@tamilnenjam.com

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

மே - ஜீன் 2025

ஆண்டு 5 ▲ இதழ் 6

பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா

Chief Editor & publisher : Sithy Wafeera

சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்

Hon. editor : Tamilnenjam Amine

ஆசிரியர் குழு :

Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ, ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன், மின்னத் ஸரா பரூஸ்

வடிவமைப்பு:

Omardeen Aysha Shakeela

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

email :
muththamizh.kalasam@gmail.com

The Editor of “Muththamizh kalasam”,
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka


எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

## ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்!

எமது இவ்விதழானது ஐந்தாவது ஆண்டுப்பூர்த்தியில், பாதம் பதிக்கும் இவ்வேளையில், இன்னும் கொஞ்சம் ஆழமாக வேரூன்றி எண்திசைகளிலும் கிளைகளை வியாபிக்கத் தொடங்கியுள்ளதென்பதை நாளுக்கு நாள் கூடும் வாசகர் எண்ணிக்கை சொல்கிறது.

கூடியவரை மக்கள் விழிப்புணர்வைத் தூண்டக்கூடிய, நேர்மறையான சிந்தனைகளைத் தரக்கூடிய படைப்புகளை நாம் பகிர்ந்து வருகிறோம். இந்த இதழ் எமது ஐந்தாண்டுப் பூர்த்தியின் மகிழ்ச்சியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் தருணமாக இருந்தாலும், சலிப்பு தட்டாமல் சுவை கூட்ட ஒரு சில படைப்புகளை மட்டும் சேர்த்திருக்கிறோம். இதுவரை

வெளியான அட்டைப்படங்கள் இவ்விதழின் முகப்பை அலங்கரிக்க, கடந்து வந்த பாதையை சற்றே திரும்பிப் பார்த்து, அதன் நினைவுகளை மீட்டிப் பார்க்கவும் முனைந்திருக்கிறோம்.

இணையத்தில் ஒரு சஞ்சிகை தொடர்ந்து பயணிப்பதும், அச்சிதழாக அதை உங்கள் கைவசம் சேர்ப்பதும் சற்று கடிதான பயணமே! அதிலும் தபாலிடும் சில பிரதிகள் உரியவருக்கு போய் சேராமலும் இருந்த சந்தர்ப்பங்கள் மிகக் கடிதானவை. ஆயினும் இனிவரும் காலங்களில் இன்னும் சிறப்பாக இதழைக் கொண்டு வரவும், விரைவாக உங்கள் கரங்களில் சேர்க்கவும் வேண்டிய பாரிய பொறுப்பு இருப்பதையும் உணர முடிகிறது. அதனால் இன்னும் கடினமாக நாம் உழைக்க வேண்டி யுள்ளது. இந்த நெடிய பயணத்தில் என்றும் எமது நேசத்துக்குரிய வாசகர்களாகிய உங்கள் ஆதரவே எமது பலம். தொடர்ந்தும் இணைந்தே செயல்படுவோம்.இமயம் தொடுவோம்.

இன்னும் சிறப்பான அம்சங்களுடன் எமது சஞ்சிகையை மேம்படுத்தக் காத்திருக்கிறோம்.என்னென்ன அம்சங்களை எதிர்பார்க்கிறீர்கள் என்பதையும், உள்ள குறைநிறைகளையும் மின்னஞ்சல் அல்லது கடித மூலமாகவும் நீங்கள் தெரிவிக்கலாம். இது எம்மை புடம்போட்டு முன்னேற்றப் பாதையில் வழிநடத்தும்.

இவ்விதழ் கருவாகி உருவாக என் சிந்தனையில் வித்திட்டு, சகல நுட்பங்களும் சொல்லித் தந்து, இன்றும் சகல ஆலோசனைகளையும் வழங்கி, இதழுக்கு எழில் சேர்க்கும் ஆசான் கௌரவ ஆசிரியர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும்,

இதழ் சிறப்புற எம்முடன் இணைந்து பயணிக்கும் வடிவமைப்பாளர் ஒமர்டீன் ஆயிஷா ஷகீலா மற்றும் எமது ஆசிரியர் குழுவினருக்கும், நிறைந்த மனதுடன் வாழ்த்துச் செய்திகளைப் பரியமாறிய அனைத்து ஆளுமைகளுக்கும் மற்றும் ஆரம்ப முதல் இன்று வரை எம்மோடு பயணித்த, பயணிக்கின்ற சகல அன் பர்களுக்கும் எனது இதயப்பூர்வமான நன்றிகளும் பிரார்த்தனைகளும்!

நன்றி

***வ.ஃபிரா வ.ஃபி***

(பிரதம ஆசிரியர்)

## ஆசிரியர் குழுவின் வாழ்த்துச் செய்திகள்

# முத்தமிழுக்கான வாழ்த்து



எழுத்தாளர் கவிஞர், நூலாசிரியை
Dr. **ஜலீலா முஸம்மில்**
(MBBS/SL)
வைத்திய அதிகாரி
ஆதார வைத்தியசாலை,
ஏறாவூர்

நெஞ்சத்தை நெகிழச் செய்யும் அருந்தமிழின் நற்சிறப்பினை சிறு வார்த்தைகளால் சொல்ல இயலுமா? தமிழின் சிறப்பைப் போற்றி பாடிய வர்கள் எண்ணிக்கை எண்ணில் அடங்கா.

'தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று பாரதிதாசனும் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாரதியாரும் தமிழ் மொழியின் மீது தீராத காதல் கொண்டு திருவாய் மலர்ந் தருளியுள்ளனர்.

அந்தவகையில் தமிழ்த் தொண் டாற்றி எம்மிதயங்களைக் கொள்ளை கொண்டு விட்ட முத்தமிழ் கலசம் இதழ் ஐந்தாவது ஆண்டில் திருவடி வைப்பதை வாழ்த்தி வரவேற்கிறேன். வளரும் எழுத்தாளர்க்குக் களமாகவும் வளர்ந்த எழுத்தாளர்களுக்கு கௌரவம் தரும் வகையிலும் முத்தமிழ் கலசம் தனது அருஞ் சேவையை வழங்குவது அனைவரும் அறிந்ததே. பெயருக்கு ஏற்பவே முத்தமிழ் பொங்கி வழி கின்ற அட்சய கலசமென்றே அத னைக் கூறுதல் எந்த ஒரு மிகைப் படுத்தலுமற்ற உண்மையாகும். இத ழாசிரியர் அன்புத் தோழி வஃபீரா அவர்களின் அயராத அர்ப்பணிப்பில் வருடம் தோறும் ஆறு முறை மலர்ந்து சிரிக்கிறது முத் தமிழ் கலசம். இவ்வரிய முத்தமிழின் கலசத்தில் இதழ் குழுவினராக பயணிப்பதில் மனப் பூர்வமான திருப்தியையும் பூரிப்பையையும் அடைகிறேன். எனது தமிழிற்கு கிடைத்த பெருமித மென்று உரைத்தல் வேண்டும்.

இவ் வாய்ப்பை வழங்கிய தோழி இதில் ஆசிரியர் கவிஞர் வஃபிரா அவர்களுக்கு இவ்விடத்தில் எனது பெருநன்றி உரைப்பது தகும். பல்சுவை அம்சங்கள் அடங்கிய ஜனரஞ்சக இதழாக முத்தமிழ் கலசம் ஒளி வீசிக் கொண்டிருப்பது போற்றுதலுக்குரியது.

முத்தமிழ் கலசமானது இன்னும் நெடுங்காலம் நிலைபெற்று நித்திய இதழாக இயங்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த் திக்கிறேன். வாசகர்கள் அனைவருக் கும் முத்தமிழ் கலசம் ஆசிரியர் குழு சார்பான இதயம் நிறை நன்றிகள்!

நன்றி.

முத்தமிழின் சொத்தாகி சிறந்துநிற்கும்
முத்தமிழ் கலசத்திற்கு அகவை ஐந்தாகிறது
புத்தகத்தமிழை புத்தாக்கத்தமிழாய் மாற்றி
அச்சிலும் இணையவழி எத்திக்கிற்கும் ஏற்றிநிற்கும்
சத்தியவழியில் நின்று சாதனை செய்திடும்
சஞ்சிகை உலகில் சஞ்சரிக்கும் எண்ணற்ற வாசகரின்
நெஞ்சிலும் நிலைத்திடும் நின்னை நீடூழி வாழ வாழ்த்துவோமே.

இணையம் எங்கள் வாசிப்பை ஆக்கிரமித்தது
இளசுகள் முதல் எல்லோர் மனமும் அதில் ஆர்ப்பரித்தது
நினைவில் நின்று அறிவில் வளரும் எதையும் அது குறைத்தது
விளைவாய் எங்கள் வளரும் தலைமுறை வளையும் நிலையும் ஆனது.
விலைபோகாத அறிவை வளர்க்க தேவை தேடலும் வாசிப்புமே
நிலையதாய் அதனை மாற்றிடவென்றே தமிழும் நினைத்தது
முத்தமிழ் கலசமாகி வாசிப்பை நேசிப்போர் அனைவரும்
விரும்பிடும் வடிவமாய் ஆகி
நெடும்பயணம் கடந்திடும் நெஞ்சுரத்தோடு
ஆண்டு ஐந்தினை கடந்தின்று போடுது நடை.

தொடர்ந்திடும் பயணத்தில் எத்தடைவரினும் துஞ்சாது
தெளிந்திட்ட நோக்கோடு தனித்துவவழியில் நின்று
தனக்கென உருவான வாசகர் படையோடு நடைபோட
புதுமைகள் பல தந்து புலமைகள் பலரையும் அடையாளம் கண்டிங்கு
புதிய ஆண்டிலும் வெற்றிப்பயணம் தொடரவென்றே

## வாழ்த்துகின்றோம் வாழியவே



R.J. **பிரகலாதன்**
(பொது சுகாதார பரிசோதகர்)
பண்டத்தரிப்பு
யாழ்ப்பாணம்.

நிலூ-பண்டாரவளை
(ஆசிரியை கஹகொல்ல
அல்.பத்ரியா மு.ம.வித்தியாலயம்)



இரு மாதங்களுக்கொரு முறை வெளிவரும்
இன்பச்சுரங்கம் தமிழின் அரங்கம்
முதற்தரம் என விளங்கும் முத்தமிழ் கலசம்
கவிதை கட்டுரை சிறுகதை முதற்கொண்டு
வணிகம் ஆரோக்கியம் என வியாபிக்கும்
பலதும் பத்துமாய் கொண்டமைந்த
மின்னியல் ஊடகம் - முத்தமிழ் பெட்டகம்
வாசிக்கையில் உண்டாக்கிடும் இன்பமோ கோடி
அதனால் அனைவரும் செல்வர் அதை நாடி
குடும்பத்துடன் இணைந்து பார்ப்பதற்கும்
படிப்பதற்கும் ஏற்றதான விடயங்கள் சுமந்து
கொண்ட கொள்கையிலும் வந்த பாதையிலும்
தனக்கென தனித்தடம் பதித்திடும் சஞ்சிகை
இனிவரும் காலங்களிலும் ஊடகம் எனும்
உரைகல்லாய் நின்று ஒன்தமிழை உரக்கச்சொல்ல
ஓர் நூற்றாண்டு வளர்கவென்றே
வாழ்த்துகிறேன் வாழியவே!

# வாழ்த்துரை

முத்தமிழ் கலசம் ஐந்தாண்டு பூர்த்தியின் பூரிப்பில் வாழ்த்துரைக்கின்றேன்.

இச்சஞ்சிகைக்காக பல தங்கு தடைகளையும் தாண்டி இச்சஞ்சிகையின் மேம்பாட்டுக்காக அயராது உழைத்து வரும் இச்சஞ்சிகையின்பிரதமஆசிரியர் தோழி வஃபிரா வஃபி அவர்களுக்கும் மதிப்புக்குரிய தமிழ்நெஞ்சம் அமின் சேர் அவர்களுக்கும் மற்றும் சஞ்சிகை குழுவினர்களுக்கும். படைப்புக்களை வழங்கிய படைப்பாளர்களுக்கும் வாசகர் பெருமக்களுக்கும் நன்றி கலந்த நல்வாழ்த்துரைப்பதில் பேரானந்தம் அடைகின்றேன்.



**எஸ்.யூ.கமர்ஜான்பீபீ** (J.P)
தேசபந்து .லங்கா புத்ர.
(Diploma in Psychology)



இரு மாதங்களுக்கொருமுறை முத்தாக ஒளிர்கின்ற முத்தமிழ் கலசத்தின் ஐந்து ஆண்டு பூர்த்தியுடன் வெளியாகும் இவ்விதழுக்கும் இதழாசிரியருக்கும் எனது வாழ்த்து செய்தியினை வழங்கி வைப்பதில் பெருமிதமடைகின்றேன். 2020 ஜூன் மாதத்தில் மின் நூலாகத் தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்த முத்தமிழ் கலசம் தடையின்றி சீரான பயணத்தை மேற் கொண்டு இம் முறை30 ஆவது இதழாக வெளிவருவதென்பது ஒரு மகத்தான சாதனையாகும்.

முத்தமிழ் கலசத்தின் தலைமை ஆசிரியரான சகோதரி வஃபீரா வஃபி அவர்கள் தனது இடையறாத முயற்சியின் காரணமாக இவ்விதழைத் தங்கு தடையின்றி வெளியிட்டு வருகின்றார். உலகளாவிய ரீதியில் பல ஆளுமைகளையும் இளம் எழுத்தாளர்களையும் இனம்கண்டு இயல், இசை, நாடக மெனப் பரந்துபட்டு சிறகடித்துப் பறக்கின்றது முத்தமிழ் கலசம். கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நூல் விமர்சனங்கள், மருத்துவக் கட்டுரைகள் போன்ற இன்னபிற விடயங்களையும் தேடிப் பெற்று, தனது இன்ப துன்பங்கள் அனைத்தையும் புறக்கணித்து முத் தமிழ் கலசத்துக்காகவே அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் சகோதரி வஃபீரா வஃபிக்கும் அவரின் செல்லக் குழந்தையான முத்தமிழ் கலசத்திற்கும், சக ஆசிரியர் குழு அங்கத்த வர்களுக்கும், எம்மை வெற்றிநடை போடவைத்து ஆதரிக்கும் வாசகர்களுக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மின்னத் ஸரா பஃருஸ்** (அல்-ஹாபிழா, அல்- காரியா மௌலவியா)



அகவை ஐந்தை தொட்ட முத்தமிழ் கலசமே!
அறுசுவை அத்தனை படைப்பும் உன் அம்சமே!
நீயின்னும் சிறப்போடு வளர்க! உயர்க!
ஐம்பது அகவைகள் தாண்டி மிளிர்க!!!!! வாழ்த்துகிறேன்…

ஆசிரியர் வஃபீராவுக்கும், சிறப்பாசிரியர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும், ஆசிரியர் குழுவுக்கும் நன்றிகளும் வாழ்த்துகளும்!

இப்படிக்கு
நட்புடன் **ரிம்ஸா டீன்**

# முத்தமிழ்க் கலசம் பொங்கட்டும்



**ச**கோதரி வஃபீரா வஃபீ அவர்களின் அயராத முயற்சியில் வெளிவரும் முத்தமிழ்க் கலசத்திற்கு, அகவை ஐந்து என்பதில் ஆச்சரியம் அதிகமிருக்கிறது.

சஞ்சிகையொன்று தொடர்ச்சியாக வெளிவருவதென்பது, கல்லில் நாருரிப்பதற்குச் சமனான முயற்சியாகும்.

சஞ்சிகைளைப் பொறுத்தவரை, அவற்றிற்கான அச்சு செலவு கூட விற்பனவில் கிடைப்பதில்லை. கையைக் கடிக்கும் பெரும் பிரயத்தனம் இதுவாகும். இலாப நோக்கத்தில் எவரும் சஞ்சிகை வெளியிடுவதில்லை. அடுத்தவர்க்கு களம் கொடுக்கும் ஓர் இலக்கியத் தொண்டுதான், சஞ்சிகை.அதற்கு அதிகம் சகிப்புத் தன்மை தேவை.

சகோதரி வஃபீரா, ஐந்து வருடங்களாக காய்தல் உவத்தலின்றி சகிப்புத் தன்மையோடு இலக்கியப்பணி புரிந்ததன் அத்தாட்சிதான், முத்தமிழ்க் கலசம் ஐந்தாம் அகவையில் நிற்பது.

வஃபீராஎப்போதும்தளராமுயற்சியும்ஊக்கமும்உடையவர்.இதுவேதான் முத்தமிழ்க் கலசத்தின் பெரு வெற்றியுமாகும்.

அகவை ஐந்தில் பூரித்து நிற்கும் முத்தமிழ்க் கலசத்திற்கும், அதன் தாய் வஃபீராவிற்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.வஃபீரா உள்ளவரை முத்தமிழ்க் கலசமும் உயிர்வாழுமென ,திண்ணமாக நம்புவதோடு பிரார்த்தனையும் செய்கிறேன்.

இவள்
இலக்கிய வித்தகர்
**சம்மாந்துறை மஷூறா.**
தலைவி Srilanka pen club,
நிர்வாக ஆசிரியர் -அவரி.

# அன்புரை

முத்தமிழ்க்கலசம் இதழ் ஐந்தாண்டுகள் நிறைவு செய்து ஆறாமாண்டில் அடியெடுத்து வைத்துள்ளது பெரும் மகிழ்விற்குரிய விடயமாகும். இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்விதழ் உலகளவிலான தமிழார்வலர்களைத் தன் பக்கம் ஈர்த்துள்ளநற்கு மிகவும் முக்கியமான காரணியாகத் திகழ்பவர் பிரதம ஆசிரியரும், தமிழார்வலர், படைப்பாளருமான சித்தி வஃபீரா என்றால் மிகை யில்லை. தனித்துவமான, தன்னம்பிக்கை மிக்க பெண்ணாகத் திகழும் வஃபீரா அவர்களை உளமார வாழ்த்துகிறேன்.

ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னும் வழிநடத்துபவராகக, தாங்கும் தூணாக, ஊக்கம் தருபவராக நிச்சயமாக ஒருவர் இருப்பார். அவ்விதத்தில் முத்தமிழ்க் கலசம் இதழின் வழிநடத்துனர், சிறப்பாசிரியர் மதிப்புறு தமிழ்நெஞ்சம் அமின் ஐயா அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் போதாது எனலாம். வாழ்த்துகள் வாழ்த்துகள் ஐயா!

முத்தமிழ் கலசம் இதழில் வரும் படைப்புகள் அனைத்துமே தரமான, தகுதி வாய்ந்த, தெரிவு செய்த படைப்புகளாக, வாசிப்பாளர்களின் மனதினை ஈர்க்கும் வகையிலான படைப்புகளாகவே இருக்கும். ஒரே விதமாக இல்லாமல் கதை, கவிதை, கட்டுரை, பெண்ணியம், நூல் அறிமுகம், சிறப்புடையோர் அறிமுகம் என ஒவ்வொரு விதமான பல்சுவை மிகுந்த இதழாக வெளிவரு வது சிறப்பு. அத்தகைய படைப்புகளை படைத் தனுப்பி வரும் உலகளவிலான படைப்பாளர்கள் அனைவருக்கும் அன் பின் மனமார்ந்த நல்வாழ்த்துகள்! ஆகச்சிறந்த படைப்புகளைத் தேர்வு செய்துவக்கும் ஆசிரியர் குழு மரு. ஜலீலா முஸம்மில், கமர்ஜான் பீபீ, ஆர். ஜே. பிரகலாதன், நிலு டீன், மின்னத் சாரா பரூஸ் ஆகிய அனைவருக்கும் அன் பினிய நல்வாழ்த்துகள்!

நூலானாலும், இதழானாலும் அவை சிறப்பதில் முக்கியப் பங்கு வடி வமைப்பிற்கு உண்டு. அவ்வகையில் சிறப்புற, அழகாக இதழினை வடிவ மைத்து எங்களின் கரங்களில் தவழத்தரும் இதழ் வடிவமைப்பாளர் ஓமர்டீன் ஆயிஷா ஷகீலா அவர்களுக்கு அன்பின் நல்வாழ்த்துகள்.

எப்பொழுது இரு மாதங்கள் கழியும், எப்பொழுது முத்தமிழ் கலசம் இதழ் கையில் கிடைக்கும் என ஆவலுடன் எதிர்பார்க்கும் வகையில் ஒவ்வொரு இதழும், ஒவ்வொரு தனித்துவத்துடன் வெளிவருகிறது. அவ்வகையில் முத்தமிழ்

கலசம் இதழ் தமிழ் உள்ளளவும் தொடர்ந்து வெளி வர இவ்வாறாமாண்டுத் தொடக்கத்தில் நிறைமனதுடன் உளமார வாழ்த்துகிறேன்.

வையம் ஆளும் முதல் மொழி
முச்சங்கம் வளர்த்த மூத்த மொழி
பாரோர் புகழும் பைந்தமிழ் மொழி
அன்னைத் தமிழ் மொழியின் கலசமாய்த்
முத்தமிழ்க் கலசம் வாழிய வாழியவே!!

படைப்பாளர் ஈனும் படைப்புகள் தமைத்
தன்னில் ஏந்தி தனித்துவ மாய்த் திகழ்ந்து
உலகோர் வசம் உத்தமமாய்த் தரும்
உன்னத இதழ் முத்தமிழ் கலசம்
வாழிய வாழியவே!




**அன்புச்செல்வி சுப்புராஜ்**
(தன்முனைக் கவிதை படைப்பாளர்கள் பேரவை
அன்பின் சங்கமம் சிறுவர் உலகம்)
சென்னை - 600072


சமூக சேவையில் தொடரும் எனது நீண்ட பயணங்கள் முத்தமிழ் கலசம் முகப்பில் எனனைக் கொண்டு வர, முதல்முதலாக என்னை கௌரவப்படுத்தியது முத்தமிழ் கலசம். அதுதான் முத்தமிழ் கலசத்தின் முதல் அச்சிதழ் என்பதும் எனக்கு பூரிப்பைத் தருகிறது. தனது ஐந்தாவது ஆண்டுப் பூர்த்தியைக் கொண்டாடவிருக்கும் இவ்விதழானது ஒவ்வொரு ஆளுமைகளையும் அறிமுகம் செய்வதில் மிக முக்கிய பங்கை வகிக்கின்றது, முத்தமிழ் கலசம் உருவாகக் காரணமாக இருந்தவர்களுக்கும், அதை செவ்வனே நடத்தி வரும் சகோதரி வஃபீரா வஃபிக்கும் மனமார்ந்த நன்றிகள்! வாழ்க வளர்க!




**ஸெய்தூன் நார்**
ஒன்டாரியோ, கனடா

# முத்தென மிளிர்ந்து வாழ்க

முத்தமிழ் கலசம் வாழ்க
முகமது அமினார் வாழ்க
எத்தனை செய்தி வந்தே
எளிதாக நம்மைச் சேரும்
அத்தனைப் புகழும் இங்கே
அழகினை அள்ளி வந்தே
இத்தரை மாந்தர் காண
இதழினில் பெருமை சேர்க்கும்

அழகிய வடிவம் கொள்ளும்
அழைத்திடும் படிக்க வைக்கும்
வழங்கிடும் செய்தி யாவும்
வரிகளாய்ப் படிமம் கொள்ளும்
கலங்கிடும் உள்ளம் நல்ல
கவிதையை வழங்கிச் செல்லும்
புழங்கிடும் மனத்தை ஈர்க்கும்
புதுமைகள் படைத்தே வார்க்கும்

சகோதரி இதழைக் கண்டோம்
சகலமும் நிறையக் கொண்டோம்
திகைத்திட வைக்கக் கண்டோம்
திகட்டிடா ஆக்கம் கொண்டோம்
பகட்டிலா பார்வை கண்டோம்
பளிச்சென ஈர்ப்பும் கொண்டோம்
வகையென வரிசை கண்டோம்
வஃபிரா சிறப்பை கொண்டோம்

ஐந்திணை நிறைவு செய்த
அற்புத இதழைக் கண்டோம்
பைந்தமிழ் நுகர்ந்தே நாளும்
படித்திட இன்பம் கொண்டோம்
செய்திடும் பணியோ பாரில்
சேவையாய் அமினார் செய்தார்
உய்த்திடும் சிறப்பைச் சொல்ல
உவமைகள் இங்கே இல்லை

முத்தமிழ் கலசம் வாழ்க
முத்தென மிளிர்ந்து வாழ்க
வித்தைகள் ஆற்ற வாழ்க
மேதினி போற்ற வாழ்க
வித்தகம் காட்டி வாழ்க
மேன்மைகள் பெற்றே வாழ்க
சத்தென ஊட்டி வாழ்க
சரித்திரம் படைக்க வாழ்க

கவியரசி
**தென்றல் கவி - தமிழ்ச்சிட்டு**
பட்டுக்கோட்டை, தமிழ்நாடு





# முத்தமிழையும் சுமந்து வரும் முத்தமிழ் கலசம்

**கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்**
முன்னாள் தகவல் அதிகாரி.
(அரசாங்க தகவல் திணைக்களம்)
'மின்னும் தாரகைகள்' நூலாசிரியை.

இத்தரை மீதினில் இலக்கிய முத்திரை பதிக்கட்டும்! முத்தமிழ் கலசம் முத்துக்களை சுமந்த கலசமாக பவனி வருவது பாராட்டத்தக்கது. பெரும் எண்ணிக்கையான பெண் எழுத்தாளர்கள் இந்த முத்தமிழ் கலசத்தை இரு மாதங்களுக்கொரு முறை முத்தமிட்டு வருகின்றனர். அருமைச் சகோதரி வஃபீரா வஃபி இச்சஞ்சிகையின் பிரதம ஆசிரியராவார்.

2020 ஜூன் 26ஆம் திகதி முதல் மின்னிதழாக வெளிவந்த இச்சஞ்சிகை, 2022 ஜனவரி மாதம் முதல் அச்சு வாகனமேறி அச்சொட்டாக வருகிறது .

இந்திய சஞ்சிகைக்கு ஒப்பாக வெளிவருகிறது.

இச்சஞ்சிகையின் வெற்றிக்கு ஆசிரியை சகோதரி வஃபீரா வஃபீயின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சியுமே காரணம் என்பேன். எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி, அமைதியாக இதுவரை முத்தமிழ் கலசத்தின் 29 இதழ்களை வெளியிட்டு சாதனை படைக்கும் சஞ்சிகை ஆசிரியை சகோதரி வஃபீரா வஃபியைப் பாராட்டி மகிழ்கிறேன்.

ஒரு முஸ்லிம் பெண் சஞ்சிகை ஆசிரியையால் இலங்கையில் முதலாவதாக வெளிவந்த சஞ்சிகை 'கலைமதி' என்ற சஞ்சிகையாகும். ஹல்கர்னோயாவைச் சேர்ந்த பேகம் சுபைதானி அப்துல் காதர் என்பவரால் 1960 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக ஏழு வருட காலமாக ஒரு முஸ்லிம் பெண்ணால் வெளியிடப்பட்ட மாதர் சஞ்சிகை என்ற பெருமையைப் பெற்றது. ஆனால் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த சஞ்சிகை இடை நிறுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

எனவே இதுவரை 29 சஞ்சிகைகளை அழகாக, அருமையாக வெளியிடும் முத்தமிழ் கலசத்துக்கும் அத்தகைய துர்ப்பாக்கிய நிலை ஏற்படக்

கூடாது என்பதே எனது நித்திய பிரார்த்தனையாகும். ஆதலால் இச் சஞ்சிகை ஆசிரியையின் கரங்களை பலப்படுத்துவது வாசகர்களின் கடமையாகும். பிறரின் சஞ்சிகையை வாங்கிப் படிக்காமல் ஆகக்குறைந்த பட்சம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரதியை மட்டுமாவது வாங்கி ஒத்துழைத்தால் இச்சஞ்சிகை தங்கு தடையின்றி வெளிவர ஏதுவாகும்.

எனவே ஐந்தாண்டு நிறைவை கொண்டாடும் முத்தமிழ் கலசம், இன்னும் ஐம்பதாண்டுகள் அல்ல , நூறாண்டுகள் முத்துக்களை சுமந்து வலம் வரவேண்டும் என மனதார வாழ்த்தி, சஞ்சிகை ஆசிரியையான சகோதரி வஃபீராவின் இந்த நல்ல பணிக்கும் நல்வாழ்த்து கூறி மகிழ்கிறேன்.

முத்தமிழ் கலசம் இத்தரை மீதினில் முத்திரை பதிக்கட்டும்! அதன் வரவும் நல்வரவாகட்டும்!

# கோபுரத்தின் கலசமாய்

கோபுரத்தின் உச்சியில்
பெருமைமிகு கலசம்
பாரதத்தின் பெருமையை
பறைசாற்றும் கவசம்
எழில்மிகு இலங்கையில்
முத்தமிழின் கலசமாய்
பல்சுவைப் படைப்புகளில்
ஐந்தாண்டு வெற்றியில்
முப்பது இதழ்களில்
முத்தான சுவைகொண்டு
விருந்தளிக்கும் இதழ்
'முத்தமிழ் கலசம்'
தமிழுக்கு முத்தான கவசம்
இலக்கியத்தின் இலக்கான
இனிதான அச்சிதழ்
எப்போதும் பார்வையிட
இணையத்தில் வசதி
பிரதான ஆசிரியர்
பிரியமான தோழி
வஃபீரா வஃபீ
வாழ்க பல்லாண்டு
வளமான இலக்கியப் பணி
என்றும் சீரோடும் சிறப்போடும்
தொடர்ந்திட இனிதான
நல்வாழ்த்துகள்!

**புதுகை ஆதீரா.**



# முத்தமிழ் கலசம் வாழ்க வாழ்கவே!

முத்துத்தமிழின் முன்னோடி கலசம்
முத்தமிழ் கலசம் வாழ்க!

சத்தமின்றி சாதனை படைக்கும்
நித்திலக் கலசம் வாழ்க!!

இத்தரைமீது முத்தமிழ் படைக்கும்
வித்தகக் கலசம் வாழ்க!

முத்திரைக் கவிதைகள் அளிக்கும்
நித்தியக் கலசம் வாழ்க.

புத்தியில் பதிக்கும் வண்ணம்
சத்தான மருத்துவக் கட்டுரைகள்
முத்தான நூல் விமர்சனம்

தித்திக்கும் அத்தனை சிறுகதைகள்
மொத்தமாகத் தந்திடும் கலசம்!

கத்தும் கடலலையாய்த் தொடரட்டும்!
பத்துநூறு ஆண்டுகள் வளரட்டும்!!

எத்தனை எத்தனை ஆளுமைகள்
முத்தமிழ் கலசம் காட்டியது?

அத்தனை அத்தனை பெருமைதனை
முத்தமிழ் கலசம் தந்ததே!

சொத்தாய் எண்ணி வாழ்த்திடுவோம்!
சத்தாய் எண்ணி போற்றிடுவோம்!

மெத்தப் படிக்க வித்திடும்
முத்தமிழ் கலசம் வளர்கவே!

எத்திசையும் புகழ் பரப்பி
முத்தமிழ் கலசம் வாழ்கவே!

இனிய நல்வாழ்த்துகளுடன்

**முனைவர்**
**கிருஷ்ணதிலகா**
போரூர். சென்னை



# முத்தமிழ்க் கலசம் வாழ்க!



அகவைகள் ஐந்து பூர்த்தி
அகமது மகிழ்ந்து வாழ்த்தி
முகமெலாம் மலர்ந்து நின்றோம்
முத்தமிழ்க் கலசம் வாழ்க!

இருமாத இதழாய்ப் பூத்து
இணையத்தில் அச்சி லெல்லாம்
பெருமைகள்
சேர்த்து, இன்பம்
பெற்றிடும் மலரே வாழ்க!

இலக்கியக் கலசம் வாழ்க!
இனித்திடும் சுவையே வாழ்க!
அழகிய வண்ணம் சேர்த்து
அமைந்தநற் கலசம் வாழ்க!

தமிழ்சொலு முலக மெங்கும்
தன்புகழ் விரித்து வைத்து
அமிழ்தமாய் ருசியை நல்கும்
அற்புதக் கலசம் வாழ்க!

கதைகவி, துணுக்கு மேலும்
கட்டுரை ஆய்வு என்று
விதவித விடயம் சேர்த்து
வழங்கிடும் கலசம் வாழ்க!

இளையவர் மூத்தோ ரெல்லாம்
இணைந்திட வழிச மைத்து
பலவிதப் பந்தி வைத்துப்
படைத்திடும் கலசம் வாழ்க!

மகளிருக் கென்றும், நல்ல
மணந்தரும் சுவைகள் கூட்டி
அகமவர் குளிரச் செய்யும்
அணிநிறை கலசம் வாழ்க!

முத்தமிழ்க் கலசம் வாழ்க!
மொழிவளம் பரப்பி வாழ்க!
வித்தக இதழ்கள் கோர்த்து
விளங்குக! கால மெல்லாம்!

**பாவேந்தல்**
**பாலமுனை பாறூக்**



# வாழ்கவே!

முத்தமிழின் கலசமிது முறையான இதழுமிது
திங்களிலே சீர்பெற்ற அமுதமிது
நித்தமுமே எதிர்பார்க்கும் நிலையான சான்றுமிது

இயற்கையுடன் இயலிசையும் இன்புறவே உண்டிங்கே
தயக்கமின்றி ஐந்தாண்டு தாரணியில் பூர்த்திசெய்த
அயர்ச்சியின்றிப் பயணிக்கும் அறிவார்ந்த பெட்டகமே
மயக்கமில்லை மறுப்புமில்லை மாண்புடைய இதழாலே

இதழுக்கே இதழ்சேர்க்கும் இதமான கட்டுரைகள்
பதமான பசுமையான பாக்களெல்லாம் இங்குண்டு
விதவிதமாய் ஆவணங்கள் விரவுகின்ற இதழாகும்
எங்கெங்குச் சென்றாலும் எத்திக்கும் கலசந்தான்
பங்கிட்டும் பகிர்ந்துகொள்ளும் பாரினிலே முத்தமிழே
தங்கட்டும் ஒளிமயமாய்த் தழைக்கட்டும் எந்நாளும் ,
வங்கத்து நீரினிசை வையத்தில்  கேட்டிடுமே .

ஐந்தாண்டு நிறைவுசெய்தே ஆறாவ(து) ஆண்டாக
பைந்தொடியாள் அசைந்துவர பகிர்ந்திடவே வாழ்த்துகிறேன்
மையுண்ட விழிகளிலே மையலவள் ஓடிவர
வையகத்தின் இருப்புவரை வாழ்வாங்கு வாழியவே



கவிமாமணி . முனைவர் ..

**சரஸ்வதி பாஸ்கரன்.**

திருச்சி, தமிழ்நாடு .



# யார் பிழை?

‘மகள், இதுதான் என்ட மகன் நம்பர். அவன் கோல் பண்ணலன்னாலும் பரவால்ல. நீங்க கோல் பண்ணி பேசுங்கமா. சரி இல்லையே. அவன் பாவம்’ என்று தனது மாமியார் சுபைதா அன்றுரைத்த வார்த்தைகள் சர்மாவின் எண்ணங்களைத் தட்டிப் பார்க்க, அதற்கு மேலும் அவற்றிற்கு ஈடு கொடுக்க முடியாமல் கண்களில் கண்ணீருடன் சுஜூதில் வீழ்ந்தாள்.

மனக்கவலை சற்றும் குறையாமல் தலைப்பாரம் அதிகரிக்க, அப்படியே உறங்கிப் போனவளை அழைத்தது கணவனின் அலைபேசி மணி.

‘அஸ்ஸலாமு அலைக்கும் தங்கம். என்ன அழுவுனிங்களா? கண் சிவந்திருக்கு’

‘வ அலைக்குமுஸ்ஸலாம்... இல்லமா. தூங்கிட்டன் நீங்க கோல் பண்ணவும் திடீர்னு எழும்பினதால அப்படி இருக்கு போல... வேற ஒன்னுமில்ல’

‘ஆ... சரி அதையே நினைச்சு கவலப்பட்டுட்டு இருக்காம எப்பவும் போல சாதாரணமா இருங்க! சும்மா யோசிச்சு மனச போட்டு குழப்பிக்காதிங்க! சரியா?’

‘ம்ம்... நான் எப்பவும் போல தான் இருக்கன். நீங்க எப்போ வருவிங்க?’

‘வந்துருவன் தங்கம். இன்னும் கொஞ்ச நாள் தானே...’

‘இந்த கொஞ்ச நாள் முடிய மூனு வருசமும் போதாது போலயே’ என்ற வார்த்தையுடன், மேலும் அப்பேச்சைத் தொடராமல் வழமையான சுக விசாரிப்புக்களுடன் அலைபேசி துண்டிக்கப் பட்டது.

‘சே... வீட்டுக்கு வார விசய மாப்பேசி அவர இன்னமும் கஷ்டப் படுத்திட்டனே. இனி இந்த விசயத்துல கவனமா இருக்கனும்’ என்று தனக்குள்ளேயே சப்னா பேசிக் கொண்டாலும் மனம் கணவனின் அருகாமைக்காக ஏங்கித் தவித்தது.

குருநாகல் மாவட்டத்தில் ஒரு சிறிய கிராமத்தில் வசித்து வரும் சப்னா அழகிய குடும்பத்தை கருவாகக் கொண்டவள். பேராதனைப் பல்கலைக்கழகப் படிப்பிற்காகக்

காலடி எடுத்து வைக்கும் போதே பெற்றோர் அவளுக்கான திருமணப் பேச்சையும் முடித்து விட்டிருந்தனர். இறைவன் மேல் தீராக் காதல் கொண்ட சப்னா திருமணத்திற்கு முன்னர் தன் மணவாளனுடனான உரையாடலை முற்றாக மறுத்தி ருந்தாள். அது அவளது குடும்ப வழக்கமும் கூட. இதனால் பெரிதும் வருத்தமடைந்த மாப்பிள்ளையின் தாயார் பல்வேறு கெஞ்சல் கொஞ் சல்களுக்கு பின் அவளைத் தனது மகனுடன் பேசுவதற்கு சம்மதிக்க வைத்ததோடு இது அவளது தாயா ரைத் தவிர வேறு யாருக்கும் தெரியா மலும் பார்த்துக் கொண்டார்.

இவ்வாறு சப்னா தனது வாழ்க் கைத் துணையுடனான காதல் பய ணத்தை தொலைபேசியின் மூலம் மெல்ல மெல்ல ஆரம்பிக்கலானாள். நாளுக்கு நூறு முறை வரும் மாமி யாரின் அழைப்புக்களும் சுக விசா ரிப்புக்களும் இனியதொரு வாழ்க் கையின் ஆரம்பப்படியாக அமைய இருவருக்கும் இனிதே திருமண மும் நடைபெற்றது. வழமையான புதுமணத் தம்பதிகளாக இவர்கள் சுற்றித் திரிந்து இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் ஒருநாள், 'மகன், நீங்க வந்த லீவு முடியப் போகுது.. இனிக் கிளம்புறதுக்கான வேலை யப் பாக்கனுமே.' என சுபைதா கூற இருவரும் இடியிறங்கியதைப் போல உறைந்து நின்றனர்.

சிறுவயதிலேயே தந்தையை இழந்த ரிஹாம் தாயின் வார்த் தைக்கு மறுவார்த்தை பேசத் தெரியாதவன் ஆதலால் சரி எனத் தலையசைத்தவாறு சப்னாவை நிமிர்ந்து பார்த்தான். அவனது பார்வையை எதிர்கொள்ள முடி யாது தலையைக் குனிந்து கொண் டாள். 'யாரா இருந்தாலும் கல் யாணம் முடிச்ச புதுசுல பிரிஞ்சு போறது கஷ்டம் தான் மகள். இனி என்ன செய்ய? இருக்குற கடன் பிரச்சினைகளை முடிக்க வேணாமா? இப்போ நீங்க படிச் சிட்டு தான இருக்கிறீங்க... உங்கட படிப்பு முடியிறதுக்குள்ள அவனும் வெளிநாட்டுக்குப் பெயிட்டு கடன அடைச்சிட்டு கொஞ்சம் காசும் சேத்துருவான் தானே...' என்று இருவருக்குமான ஆறுதல் வார்த் தைகளை மொழிந்தார் சுபைதா.

அவசரமாக திருமணம் நடந்து அதை விட அவசரமாக பிரிவு வரும் என கனவிலும் நினைத்திராத சப்னாவின் மனது இதனை ஏற்றுக் கொள்ள மறுத்தது. 'இறைவா! எந்த ஆசையுமில்லாம நான் படிச் சிட்டுத்தான இருந்தன். என் வாழ்க்கைய அப்படியே விட்டி ருக்கலாமே... ஏன் இந்த திடீர் கல்யாணம்? அவரப் பாத்து பேசிப் புரிஞ்சுக்க ஆரம்பிக்குற நேரத் துல அவர் என்னைய தனியா விட்டுட்டு போகனுமா? எனக்கு ஏன் இந்த நிலைமை? இந்த வெளிநாட்டு வாழ்க்கை நம்ம நினைக்குற மாதிரி இலேசா முடி யுற ஒன்னில்லையே...' என ஏங்கி ஏங்கி அழுதாள்.

'சப்னா... நீங்க இந்த மாதிரி அழுவுறதுக்கு இதுல ஒன்னுமே இல்ல. நான் பொயிட்டு ஆறே மாசத்துல திரும்ப வந்துருவன் சரியா? வெறும் ஆறே மாசம் தான் அது போறது கூட தெரியாது. நீங்க யோசிக்கவே தேவையில்ல' என

தன் மனைவியின் தலையை வருடி ஆறுதல் அளித்த ரிஹாம் வெளி நாட்டு வாழ்க்கையை நோக்கிப் புறப்படலானான். அங்கு சென்று ஒரு வாரத்தின் பின்னர், 'சப்னா, நான் இப்போ தான் மெனேஜர் கிட்ட பேசுனன். இன்னும் ஒன்னர வருசம் முடியாம நாட்டுக்குப் போக ஏலாதுன்னு சொல்றாரு.... எனக்கு என்ன செய்றதுன்னு தெரியல' என்று ரிஹாம் படபடப்பாகக் கூறிய வார்த்தைகளுக்கு சப்னா விடம் கண்ணீர் மட்டுமே பதிலாக வெளி வந்தன.

'ஒன்னர வருசம்... இனி நான் என்ன செய்யப் போறன்? அவர் ஆறு மாசத்துல திரும்பி வந்துரு வாருன்னு எவ்ளோ சந்தோசமா இருந்தன். இப்போ இன்னும் ஒன் னர வருசமும் நான் தனியாவே வாழனுமா? யா அல்லாஹ்! என் படிப்பு முடிஞ்சு நான் வெளியா னதுக்கப்பறம் அவரில்லாம நான் எப்படி இருப்பன்? அவர் எப்போ வருவாருன்னு எல்லாரும் கேக்குற கேள்விக்கு நான் என்ன பதில் சொல்லப் போறேன்னு தெரிய லையே....' என்ற சப்னாவின் கேள் விகளுக்கு ரிஹாமிடமும் கண் ணீரைத் தவிர வேறு எந்த பதிலும் இல்லை.

இரண்டு வாரங்களின் பின்னர்,

'மகள்... எனக்கு செலவுக்கு சல்லி இல்ல. அவசரமா இருவதா யிரம் ஒன்னு தாங்கோ'

அவர் இன்னும் சல்லி அனுப் பல்லேயே மாமி... இப்போ தான வேலைக்கே சேந்திக்காரு...'

'ஏன் சல்லி கொடுக்காமையா இருந்திருப்பாங்க... அதெல்லாம் இருக்கும். எனக்கு அவசரமா தேவ மகள்... அதனால தான் கேக்கு றன்... இன்டைக்கு இரவுக்குள்ள வேணும்' என்றவாறு அழைப்புத் துண்டிக்கப்பட்டது.

ரிஹாம் வெளிநாடு சென்று மூன்று மாதங்கள் கூட முடிவடை யாத நிலையில் சப்னாவிற்கு வந்த சுபைதாவின் அழைப்பு அது. இவ்வாறு பணம் கேட்டு வரும் அவரது மாதா மாத அழைப்புக்கள் அவரிடம் ஏதோ ஓர் மாற்றம் ஏற்பட்டிருப்பதை சப்னாவிற்கு உணர்த்தியது.

சிறிய வயதிலேயே கணவரை இழந்த சுபைதா தனது இரு ஆண் மற்றும் இரு பெண் பிள்ளைகளை வளர்க்க நிறையவே பாடுபட்டிருக் கிறார். அந்நிலையில் பணத்தை செலவழிப்பது அவருக்கு எட்டாக் கனியாகவே இருந்திருக்கிறது. தனது பிள்ளைகள் வளர்ந்து உழைக்கும் நிலையில் தன் பண ஆசையை நிறை வேற்ற முயன்ற அவர் அது அவர் களது வாழ்க்கையை கேள்விக் குறி யாக்கி விடும் என்பதனை மறந்து விட்டார். இதனால் பணமே அவ ரது பிரதான எண்ணமாக மாறியது.

நாட்கள் செல்லச் செல்ல மகன் அனுப்புகின்ற பணத்திற்காகக் காத்திருப்பவர் போலேயே நடந்து கொண்டார். இவ்வாறிருக்க ஒரு நாள் ரிஹாமிடம் இருந்து சுபை தாவிற்கு அழைப்பு வந்தது. 'உம்மா... எப்படி இருக்கிங்க?'

'நல்லம் மகன்... நீங்க எப்படி இருக்கிங்க? வேலை எல்லாம் எப் படி போகுது?'

'எல்லாம் நல்லாப் போகுது உம்மா... அது வந்து.. உங்களுக்கு ஒரு சந்தோசமான செய்தி சொல்ல லாம்னு தான் கோல் பண்ணன்'

'என்ன விசயம் மகன்? சம்பளம் கூட்டித் தந்திருக்காங்களா? இந்த இருபதாயிரம் போதவே இல்ல மகன்... இன்னுமொரு பத்தாயிரம் சேத்து அனுப்புங்களே...'

'இது அதில்ல உம்மா. நான் நாட்டுக்கு வரப் போறன்'

'எ... என்... என்ன... என்ன சொல்றிங்க மகன்! நா.. நாட் டுக்கா... ஏன் திடீரெண்டு?'

'இல்லமா. வந்து இரண்டு வருசம் முடிச்சுட்டு தான அதுதான் நாட்டுக்கு வந்துட்டுப் போலாம்னு யோசிச்சன்'

'அது சரி மகன்... வரத் தான் வேணும். ஆனா உங்கட கடன் விசயம் இன்னும் முழுசா முடி யல்லே... நிக்கிறதோட எல்லாத் தையும் முடிச்சிட்டு வந்தா இலேசு தான.. மூத்த தங்கச்சிட கல்யாணத் துக்கு வாங்குன கடன்... இப்போ தம்பிக்கும் அடுத்த தங்கச்சிக்கும் கல்யாணம் முடிவாகிருக்கு. அதை யும் முடிச்சுட்டா நல்லம் தான மகன்' என்று பல கதைகளை சொல்லி அவனை சம்மதிக்க வைத்தார்.

மூத்த மகனாகப் பிறந்ததைத் தவிர வேறு எந்த தவறுமே செய்திராத ரிஹாம் சூழ்நிலைக் கைதியானான். அவன் வெளிநாடு சென்று தனக்கு அடுத்துப் பிறந்த மூவரையும் சிறப்பாக வாழ வைத்தான். ஆண்டுகள் நான்கும் கடந்தன...

ரிஹாமின் கடன் முழுதாக ஓய்ந்தபாடில்லை. சப்னாவை அடுத் துள்ள தங்கையும் திருமணம் முடித்து இரண்டு குழந்தைகளுடன் வாழ்கிறாள். சப்னாவிற்கு அந்த வீடியோ அழைப்பு ஒன்றே ஆறு தலாக இருந்தது. அவளது தனிமை அவளது முழுக் குடும்பத்திற்கும் மிகுந்த வேதனையளித்த போதும் அது எதனையும் அவளிடம் காட் டிக் கொள்ளாது தம்மால் இயன்ற வரை அவளை சந்தோசமாகப் பார்த்து வந்தனர். ரிஹாமின் ஊருக்கு சென்றால் அவனது நினை வுகள் அவளை அதிகம் வாட்ட ஆரம்பிக்க, அங்கு அடிக்கடி செல் வதை தவிர்த்தாள்.

'இவள முடிச்சதால தான் என்ட புள்ள கடன்காரனா மாறிட்டான்' என சுபைதா தனது உறவுகளிடையே சப்னாவை குத்த லாகப் பேசுவதும் அவளது இந்த மாற்றத்திற்கு ஒரு காரணம் என லாம். ஆனால் ரிஹாமின் கடன் களை அடைப்பதற்கு சப்னா தனது நகைகள் அனைத்தையும் விற்று சுபைதாவிடம் தான் பணத்தை ஒப்படைத்திருந்தாள். இந்த பணத்தாசை சுபைதாவை சுய நலவாதியாக மாற்ற சுபைதாவும் தன்னுடைய ஏனைய மூன்று பிள் ளைகளும் வசதி வாய்ப்புக்களுடன் வலம் வர ஆரம்பித்தனர். இங்கு ரிஹாம் தாயின் சொல்லை மீற முடியாமல் இன்று வரை தன்னை யும் தன்னவளின் இளமைக் காலத்தையும் அழித்துக் கொண் டிருக்கிறான்.

**சதீகா றஸ்லி** - நாகவில்லு

முற்றும்!



# சுய ஒழுக்கமும் நாகரீகங்களும்

1. அடுத்தவர் பணத்தை முடிந்தவரை ரொட்டேட் பண்ணாதீர்; பண்ணவும் நினைக்காதீர்.
2. முடிந்தவரை அடுத்தவரின் கார் மற்றும் டு வீலர் கடன் கேக்காதீர்.
3. கடன்வாங்கி சென்ற வாகனத்தில் முடிந்த வரை எரிபொருள் நிரப்பி கொடுங்கள்.
4. பொதுவாக செலவு செய்யும் இடத்தில் முன்கூட்டியே சந்தேகம் இருந்தால் கேட்டு விடுங்கள். செலவு செய்தபின் கேள்வி கேட்காதீர்கள்.
5. பொது இடங்களில் நிற்கும் போது யாருடைய வழியையேனும் அடைத்துக் கொண்டு நிற்கிறீர்களா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.
6. நண்பர்கள்/ உறவினர்கள் வீடுகளுக்கு செல்லும்போது அவற்றின் அமைப்பைக் குறை சொல்லாதீர்கள். (பாத்ரூம் இங்கே இருந்திருக்கலாம்). அமைப்பை மாற்ற யோசனை சொல்லாதீர்கள். (இந்த பிரிட்ஜை இங்கே வெச்சுக்கலாமே! (None of your business) அவர்கள் படுக்கையறைக்கு செல்லாதீர்கள். அவர்கள் போனைக் கேட்காதீர்கள். அவர்கள் வைஃபை பாஸ்வேர்ட் கேட்காதீர்கள்.
7. கடனைத் திருப்பிக் கேட்கும் முன்னர் அதற்கு ஒரு குறிப்பிட்ட குறைந்த பட்ச நாட்கள் காத்திருங்கள்.
8. ஒருவர் கைபேசி அழைப்பை எடுக்கவில்லை என்றால் தொடர்ந்து விடாமல் மீண்டும் மீண்டும் அழைக்க வேண்டாம். அது கொஞ்சம் சைக்கோத் தனம். அவர்களையும் தேவையில்லாமல் பயமுறுத்தும்.
9. டாக்சிதான் ஏறிவிட்டோமே என்று டாக்சியில் கத்திப் பேசாதீர்கள்.
10. அது ஓட்டுனரை தொந்தரவு செய்யும். ஹெட்செட்டில் பாட்டு கேட்டுக் கொண்டே சத்தமாகப் பேசவோ, பாடவோ, டான்ஸ் ஆடவோ வேண்டாம்.

11. நீங்கள் ஓட்டுனராகவோ அல்லது சேவை வழங்குநராகவோ (எலக்ட்ரீசியன், பிளம்பர், பெயிண்டர் etc) இருந்தால் கஸ்டமரின் Personal விஷயங்களை/தகவல்களைக் கேட்காதீர்கள். உங்கள் வேலையை மட்டும் பாருங்கள்.
12. ஒருவர் உங்களுக்கு treat தரும் போது இதுதான் சமயம் என்று விலையுயர்ந்த ஐட்டங்களை ஆர்டர் செய்யாதீர்கள்.
13. நீங்கள் Guest ஆக ஒரு உறவினர் வீட்டுக்கு சென்றால் உங்களுக்குத் தேவையான மாத்திரை மருந்துகளைக் கொண்டு செல்லுங்கள். அங்கே போய் ராத்திரி 9 மணிக்கு 'எனக்கு இந்த மாத்திரை வாங்கி வந்திடறியா' என்று கடுப்பேற்றாதீர்கள்.
14. முதல் சந்திப்பிலேயே ஒருவரைப் பற்றிய Opinion களைத் தவிருங்கள். 'நீங்க ரொம்ப Shy டைப்பா? வந்ததில் இருந்து பத்து வார்த்தை கூட பேசி இருக்க மாட்டீங்க' இதுபோன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தாதீர்கள்!
15. நீங்கள் சந்திக்கும் நபரைப்பற்றி அதிகம் கேளுங்கள் / பேசுங்கள். உங் களைப் பற்றி அல்ல. (நான் எப்படின்னா, நான் இப்படித்தான், எனக்கு இது பிடிக்காது, ஒருநாள் நான்... ).
16. வயது, சம்பளம் , விவாகரத்து காரணம், இவைகளைக் கேட்காதீர்கள். தம்பதிகளிடம் எப்போது குழந்தை என்று கேட்கவே கேட்காதீர்கள்.
17. உங்களை விட வயதில் சிறியவர்களிடம் உரையாடும்போது அட்வைஸ் செய்யாதீர்கள்.
18. வீட்டில் உறவினர்கள் வருகிறார்கள் என்றால் அவர்களுக்கு அன்றாடம் தேவையானவற்றை வாங்கி வையுங்கள்.
19. அவர்களை பாத்ரூம் சென்று என்றோ தீர்ந்து போன பேஸ்ட்டை பிதுக்க வைக்காதீர்கள்.
20. புதுமனைப் புகுவிழாவின் போது வீடு வாங்கியவரை முந்திரிக் கொட்டை போல ' சதுர அடி எத்தனை; என்ன விலை என்று கேட்காதீர்கள். எங்க ஏரியாவில் கம்மி ரேட் என்றெல்லாம் சொல்லாதீர்கள்.
21. 'வீடு நல்லா இருக்கு வாழ்த்துகள்!" என்று முதலில் சொல்லுங்கள்.
22. ஒருவர் உங்களிடம் அன்பளிப்பை கிஃப்ட் ரேப் செய்து கொடுத்தால் 'பிரிக்கலாமா?' என்று கேட்டுவிட்டுப் பிரியுங்கள்.
23. ஓ, சாண்டிவிட்ச் மேக்கரா, ஏற்கனவே என் கிட்ட இருக்கே' என் றெல்லாம் சொல்லாதீர்கள். எதுவானாலும் சிரித்த முகத்துடன் ஏற்றுக் கொள்ளுங்கள்!

24. பழையநண்பர்கள்சந்திப்பில்உங்களைப்பற்றி/உங்கள்குழந்தைகள் பற்றி உயர்வாகவோ தாழ்வாகவோ பேசிக் கொள்ளாதீர்கள்.
25. உங்கள் Designation கேட்டால் மட்டும் குறிப்பிடுங்கள்.
26. ராத்திரி 8 மணிக்கு மேல் ஒருவருடைய வீட்டுக்கு செல்ல வேண்டாம். 9 மணிக்கு மேல் போன் செய்ய வேண்டாம்.
27. நீங்கள் Guest ஆக சென்றிருந்தால் காலை சீக்கிரம் எழுந்து கொள்ளுங்கள். 10 மணிவரை குறட்டை விட்டுத் தூங்க வேண்டாம்.
28. ஒருவரை 3 வினாடிகளுக்கு மேல் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பது Offensive (அந்த ஒருவர் உங்கள் காதலியாகவோ காதலனாகவோ இல்லாத பட்சத்தில்). அதேபோல் ஒருவர் சமையல் செய்யும் போதோ,
29. கோலம் போடும் போதோ, வரையும் போதோ பின்னால் நின்று கொண்டு உற்றுப் பார்த்துக்கொண்டே இருக்காதீர்கள்.
30. பாடல்களை எப்போதும் இயர் போனிலேயே கேளுங்கள். சைனா செட்டை இயக்கி மற்றவர்களை கதிகலங்க வைக்காதீர்கள்.
31. ஒருவரின் உடல் அமைப்பைப் பற்றி Comment செய்யாதீர்கள். (என்ன சார்? தொப்பை பெருசாயிருச்சு போல).
32. டாய்லெட் யூரினலில் ஏற்கனவே ஒருவர் இருந்தால் அவர் பக்கத்தில் இருக்கும் யூரினலைத் தவிருங்கள்.
33. மற்றவரின் Taste - Preference களைக் குறை சொல்லாதீர்கள். (இந்த புக்கெல்லாம் எப்படித்தான் படிக்கிறீர்களோ / இந்தப் பாட்டெல்லாம் எப்படி கேட்கிறீங்களோ!).
34. ஒருவர் போட்டோ பார்க்க போனை உங்களிடம் நீட்டினால், அந்த போட்டோவை மட்டும் பாருங்கள்.
35. குழந்தை இன்னும் இல்லை என்றால் அத்துடன் விட்டு விடுங்கள். ஏன் என்று கேட்டு அவர்கள் மனதை காயப்படுத்தாதீர்கள்.
36. நமது வீட்டில் அல்லது கடையில் அல்லது நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு மதிப்பளியுங்கள். நமக்கு கீழ் உள்ள ஊழியர்களை மேன்மேலும் அதிக வேலைப்பளு கொடுக்காதீர்கள்.
37. அப்படி வேலைகள் அதிகரிக்கும் போது அதற்கான ஊதியத்தை மனம் நிறைவாக வழங்குங்கள்.

குறைநிறைகள் அனைவரிடமும் உண்டு. நம்மிடம் இருக்கும் தவறுகளை சரி செய்ய முயற்சி செய்வோம்.

**அஸ்ட்ரோ வெ.பழனியப்பன்**

# உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்

சென்னை



## வாழ்த்துரை

இலங்கை, கொழும்பு நகரிலிருந்து வெளியாகும் முத்தமிழ் கலசம் என்கிற மின்னிதழ் ஐந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. தமிழ் இலக்கிய உலகில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு சிறப்பாக செயல்படுகிற இந்த மின்னிதழின் ஆசிரியர் கவிஞர் சித்தி லஃபிரா அவர்கள், தொடர்ந்து கவிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் நல்லதோர் இடமளித்து அவர்களது படைப்புகளை வெளியிட்டு வருகிறார். காலாண்டு இதழாக முத்தமிழ் கலசம் காலத்தோடு மலர்கிறது. பன்முக இதழாக வெளியாகும் இந்த இதழில் வளரும் கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் ஊக்கப்படுத்தி பரவலாக நன் மதிப்பைப் பெற்று பாராட்டுக்கு உரிய மின்னிதழாக முன்னணியில் உள்ளது.

முத்தமிழ் கலசத்தின் சிறப்பாசிரியராக பிரான்சு தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள் இருப்பது கூடுதல் சிறப்பு. சிறந்த வடிவமைப்பில் வெளியாகும் முத்தமிழ் கலசம் ஒவ்வொரு இதழிலும் கவிஞர்களது ஹைக்கூ, தன்முனைக் கவிதைகள், புதுக்கவிதைகள், நவீனக் கவிதைகள், கட்டுரைகள் , இலக்கிய நிகழ்வுகள் பற்றிய செய்திகள் மற்றும் நேர்காணல்களை வெளியிட்டு பல்சுவை இதழாக விளங்குகிறது என்றால் மிகையில்லை.

ஐந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்து வெற்றிநடை போடும் முத்தமிழ் கலச மாத இதழின் ஆசிரியர் கவிஞர் சித்தி லஃபிரா அவர்களுக்கும் அவரது ஆசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் , வாசகர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம் மற்றும் தன்முனைக் கவிதைகள் குழுமம் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க வளமுடன்.

அன்பன்,

முனைவர் கா.ந.கல்யாணசுந்தரம்
நிறுவுநர்
உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம்
தன்முனைக் கவிதைகள் குழுமம்
சென்னை

மின்னிதழ் உலகில்
மகத்தான சாதனைப் பயணம்
முத்தமிழ் கலசம்

24/APRIL/2025

Haiku Society Of World Tamil Poets, Chennai
https://www.facebook.com/groups/HSWTP100/

.
போட்டவிதை இன்று பொலியும் மரமாகி
ஆட்டிப் படைக்கும் அரும்நிழலாய்த் - தேட்டத்தால்
மூன்று தமிழ்விளைத்து முற்றில்லா சீர்விளைத்து
சான்றுடன் நிற்பதன்றோ சால்பு.
.
அஞ்சாண்டில் அஞ்சு நிலம்போலும் அஃதுடன்
அஞ்சாண்டில் ஐவகை பூதம்போல் - அஞ்சாண்டில்
அஞ்சாமல் நிற்கும் அருந்தமிழின் மேற்கலசம்
அஞ்சரனைப் போலாம் அறி.
.
கோலா கலம்விளைத்துக் கொங்கு தமிழ்படைத்து
ஏலாதி போல இதம்தந்துத் - தாலாட்டில்
மாற்றியோ சித்து மனக்கண் திறக்கவைக்கும்
ஈற்றில்லா  நல்ல இதழ்.
.
மன்றத் தமிழின் மதிப்பு குறையாமல்
இன்றும் அதனை இயல்பாகக் - குன்றேற்றி
உச்சத்தில் வைக்கும் உயர்ந்த இதழாக
அச்சமற நிற்கிறதே ஆங்கு.
.
காத்திருக்கும் வாசகர்க்குக் காலம்போல்; கண்ணிரண்டும்
பூத்திருக்கும் எல்லார்க்கும் பூவனம்போல் - வாத்தியங்கள்
அன்ன தமிழால் அகத்தைக் களவாடும்
இன்ப இதழாம் இது.
.
தோப்பறிந்து வாழுந் துயரில்லா புள்ளினம்போல்
யாப்பறிந்து வாழ்கின்ற இக்கலசம் - பூப்படைநது
ஐந்தாண்டைத்  தாண்டி அழகாய்த் தொடைசமைத்துப்
பைந்தொடையை ஆள்கிறதே பார்.

# தமிழாய்ப் பொழிந்து தரமுயர வாழ்த்துகின்றேன்

.

வண்ணத் தமிழ்செய்யும்  வஃபீரா வஃபியிவர்
எண்ணத் தரத்தின் இயல்பெல்லாம் - விண்வாரும்
மின்னாகும் என்றால் மிகையில்லை; இஃதன்றி
என்னாகும் செந்தமிழ் இன்று...?

.

இல்லா விதையா இவர்முயற்சி; எவ்விதழுஞ்
சொல்லாத ஒன்றா சுகப்பயணம்; - நில்லா
பயணமா இந்தப் பதிப்புகள்; கண்டு
மயங்கு கிறதே மனம்.

.

சோரா முயற்சியொன்று சொர்கத்தைக் காட்டியின்று
சீராளும் விந்தை சிறப்பாகும் - பாராளும்
மன்னனுக்கே இல்லா மதிப்பும் புகழும்உன்
எண்ணத்திற் குண்டென்பேன் யான்.

.

துள்ளிவிளை யாடித் துடிப்பான நூல்படைத்து
வெள்ளிவிழா கொண்டாடி வேட்கையுடன் - அள்ளியள்ளிச்
செந்தமிழை வாரிச் சிறப்பாய் வழங்கிநிதம்
இந்தவுல காள்வாய் இனித்து.

.

இன்னும்  தமிழாண்(டு) இனிய அசையாண்டு
நன்மை விளைக்கும் நயத்தோடு - விண்ணும்
தமிழாய்ப் பொழிந்து தரமுயர இந்த
அமின்வாழ்த்து கின்றேன் அகத்து.



**தமிழ்நெஞ்சம் அமின்**
**பிரான்சு**



BBQ
DARBAR
BIRIYANI & BBQ
HALAL FOOD
100% CERTIFIED
Menu
BIRIYANI
Chiken Biriyani.
BBQ Biriyani (leg)
BBQ Biriyani (Breast)
Plain Biriyani
DRINKS
Special Kerala Kulkki
Duth tarboz pena
BBQ
BBQ (with Chapati) leg &chest
Chapati
NEW • NEW • NEW • NEW • NEW • NEW •
We Are open
@bbq.darbar
@bbq.darbar
WELLA food court
Galle road
Colombo - 06

# ஐந்தாண்டுகள் நிறைவு காணும் 'முத்தமிழ் கலசம்'



வஃபீரா வஃபி அவர்களை ஆசிரியராகக் கொண்டு 2020ல் இணைய இதழாக ஆரம்பிக்கப் பட்ட 'முத்தமிழ் கலசம்' ஐந்தாண்டுகளைத் தொட்டு தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. இப்போது அச்சிலும் கூட வெளி வருகிறது.

இரு மாதத்திற்கொருமுறை வெளிவரும் சஞ்சிகை இது. இதற்கான வாசகர்கள் தமிழ் எங்கெங்கெல்லாம் வாழ்கிறதோ அங்கெல்லாம் இருக்கின்றமை மகிழ்ச் சியைத் தருகிறது.

சஞ்சிகை வெளியிடுவதென்பது இலேசான காரியமல்ல என்பது நாமனைவரும் அறிந்த உண்மையே. அதிலும் தொடர்ச்சியாக அதனை செய்வது எத்தனை சிரமமான காரியம் என்பதுவும் எங்களுக்கெல்லாம் தெரியும். எனினும் தான் முன் வைத்த காலை பின் வைக்காமல் சிறிதும் சளைக்காமல் தான் எடுத்த கைங்கரியத்தை வெற்றிகரமாக செய்து வரு பவர் அதன் ஆசிரியர் வஃபீரா வஃபி.

இதுகாலம் வரை வெளிவந்துள்ள சஞ்சிகைக்களின் ஆக்கங்கள் தரமா னவையாக, காத்திரமானவையாக அமைந்திருந்ததன் காரணமாக தொடர்ந்தும் இதனை வெளியிடுவதற்கான மன தைரியத்தை, உற்சாகத்தை இவருக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது எனலாம்.

மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட சஞ்சிகை தனது பயணத்தை வெற்றிகரமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இத்தனை காலம் இதனை சுமையாக கருதாது, தனக்கு பொருளாதாரத்தில் ஏற்படும் நஷ்டங்களினாலும் சோர்ந்து போய்விடாமல் தொடர்ந்தும் இயங்கி வரும் சஞ்சிகை ஆசிரியர் வஃபீரா வஃபி பாராட்டுக்குரியவர்.

இன்னும் பல்லாண்டுகள் இச்சஞ்சிகை இதே சிறப்புடன் அல்லது இதை விடவும் சிறப்பாக வெளிவரவேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

இப்பணி அவருக்கான பணி மட்டுமல்ல, இலக்கிய உலகுக்கான பணியும் தான் என உணர்ந்து என்றென்றும் எமது இலக்கிய உலகம் இப் பயணத்தில் தோள் கொடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன்.

**கவிமணி.என்.நஜ்முல் ஹுசைன்,**

தலைவர்.வலம்புரி கவிதா வட்டம் ,கொழும்பு

# முத்தமிழ் கலசம் பற்றிய ஒரு வாசகியின் கண்ணோட்டம்

**ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்** - கிண்ணியா

கொழும்பைச் சேர்ந்த சித்தி ஷஃபிராவை இதழாசிரியராகக் கொண்டு, இரு மாதங்களுக்கு ஒரு முறை மலரும் 'முத்தமிழ் கலசம்' சஞ்சிகை யானது, இலக்கிய வட் டத்தின் ஐந்து ஆண்டு பூர்த்தியின் மகிழ்வில் தனது 30 ஆவது இதழில் காலடி எடுத்து வைத்து வெற்றி நடை போடுகின்றது.

ஈழத்து கலை இலக்கிய வளர்ச் சியிலும், எழுச்சியிலும் சஞ்சிகைகளின் செல்வாக்கும், பங்களிப்பும் மிக முக்கிய மான தொன்றாக விளங்கு கின்றது.

இருந்தாலும் நம் நாட்டை பொறுத்தவரையிலும் இலக்கிய சஞ்சிகை ஒன்றினை தொடர்ச் சியாக வெளியிடுவது என்பது, போராட்டத்தையும் தாண்டிய பெருவெற்றியாகவே கருதலாம்.

காரணம் வாசிப்பாளர்களின் ஆதரவு, சந்தைப்படுத்தல், பொரு ளாதாரநெருக்கடி, உரியநேரத்தில் இலக்கிய படைப்பாளர்களின் ஆக்கங்கள் வந்து சேராமை என பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தவாறே இந்த சஞ்சிகைகள் தம்மை ஸ்திரப் படுத்திக்கொண்டு வாசகர்களை வந்தடைகின்றன என்பது பலரும் அறியாத உண்மை.

மொழித்திறன், ஆக்கத்திறன், கலை இலக்கியப் பகிர்வுகள், தொடர்பாடல், என்பனவற்றை சஞ்சிகைகள் நமக்கு தருவதோடு சிறந்த வாசிப்புகளுக்கான உந்து சக்தியாகவும் அமைகின்றது.

2022 ஆண்டு 02 ,இதழ் 06 இதிலிருந்து முத்தமிழ் கலச சஞ்சி கையின் வாசகியாகிய எனக்கு இதழ் 30 வரை உயர்ந்துவிட்ட இதன் வளர்ச்சிப் படிகளை வாசித் தறிந்து, உணர்ந்து கொள்ளவும் முடிகின்றது.

தரமும் சஞ்சிகையின் தோற் றமும், பக்கங்களின் அதிகரிப்பும் புதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

அட்டைப் படங்கள் ஒவ் வொன்றும் அழகிய வடிவமைப்புடன் ஆளுமைகளின் வண்ணப் படம் தாங்கியதாக அலங்கரித்திருப்பது சிறப்பு.

உள்ளே ஆசிரியர் பக்கத்தில் நூலாசிரியரின் கருத்துக்களும், அந்தந்த காலத்திற்கேற்ற விடயங் களை தாங்கிய செய்திகளும், தீர்வுகளும் என வாசிப்போரை அறிவார்ந்து சிந்திக்கவும் தூண்டு கின்றது.

மகளிர் தினங்களுக்கான சிறப்பு மலர்கள், பெண்களுக்கான உயர்வையும் ஆளுமையையும் சிறப்புற எடுத்துக்காட்டுவதுடன், பெண்களுக்கான ஊக்குவிப்பாகவும் வெளிவந்திருக்கின்றன.

வளரும் இளம் கலைஞர்களின் ஆக்கங்களுக்கு களம் கொடுப்பதோடு, இந்திய எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கும் களம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஆளுமை அறிமுகங்கள், நூல் ஆய்வுகள் திறன் நோக்கு, றோணியோக்களும் சிற்றேடுகளும் தொடர்,

மருத்துவ பக்கங்கள், சமையல் குறிப்புகள், டிப்ஸ் போன்ற காத்திரமான படைப்புகள் இந்த சஞ்சிகையை அலங்கரித்து இருக்கின்றன.

பின்னட்டை உள் பக்கம், வெளிப்பக்கம் நூல் வெளியீடுகளின் செய்திகளும், அதற்குரிய படங்களும் பிரசுரித்து இருப்பது வெளியீட்டில் கலந்து கொள்ளாதவர்களையும், அந்த நூல்வெளியீட்டில் உள்ள விடயங்களை அறிந்து கொள்ளத் துணை புரிகின்றது.

ஒரு சஞ்சிகைக்கான அனைத்து அம்சங்களையும் சிறப்பாக நிறைவு செய்திருக்கும் முத்தமிழ் கலசம் இதழ், வாசகர் மத்தியில் அமோக வரவேற்பினை பெறுவது நிச்சயம். இதற்காக உழைக்கும் ஆசிரியர் குழுவுக்கும் பாராட்டுக்கள்! .

சஞ்சிகைகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையான பொருளாதார சிரமங்களைக் குறைப்பதற்காக, வாசித்து விட்டு வெறுமனே கடந்து விடாமல் நாம் சந்தாதாரராக இணைந்து கொள்ளுமிடத்து அதன் வளர்ச் சியிலும் வெளியீட்டிலும் உயர்வுகள் நிச்சயம் அதிகரிக்கும்.

இனி தொடர்ந்து வரும் காலங்களிலும் முத்தமிழ் கலசம் சிறந்து விளங்க எங்களது மனமார்ந்த வாழ்த்துகள்!

# முத்தமிழ் கலசமே

அகவை நிறை ஐந்தினிலே -
சிரிக்கும் சஞ்சிகையே!
பல்லாயிரம் அகம் நுழைந்து -
தனியிடம் பெற்ற முத்தமிழே!

பல்சுவைத் - தகவல்களை
அழகாய் அச்சேற்றி
நல் எழுத்துப் - பணியினிலே
சிறக்கும் முத்தமிழே!

இன்னும் பல்லாண்டு -
நிலைத்துப் புகழோடு என்றும்
மின்னும் தாரகையாய் -
ஒளிர்வாய் என்றும்
முத்தான முத்தெனவே!

**மக்கொனையூரான்**

# வளரட்டும் செம்மொழியே

முப்பாட்டன் மொழியின் வழி
முத்தமிழின் மைதீட்டி
உருவான இதழ் அன்றோ
இமயத்தின் நகல் ஒன்றோ

பாரினிலே கலைத்துறையை
மார்தட்டி பேசிடவே
நிறை தளும்பா கலசமென
வந்துதித்த நூல் எமதோ

சிறு நாவல் சிறுகதைகள்
கவிதையும் கட்டுரையும்
ஆளுமைகள் பெருமையையும்
தாங்கி வரும் எம் பனுவல்

எழுத்துலகின் ஏற்றமென்று
எழுதுகோலின் நாட்டமென்று
எண்ணடங்கா வெளியீடு
கண்டதொரு காவியமோ

ஐந்தாண்டு மட்டுமல்ல
அவைகளிலே பெயர் சொல்ல
நூறாண்டு நூறாண்டு
செழிக்கட்டும் இப் பணியே!
வளரட்டும் செம்மொழியே!


**சோதிகா.ரெ** (ஆகிஷா)
கொக்குவில்

# விடியல் எப்போது

**கா.ந.கல்யாணசுந்தரம்.**

புனைவுகளுக்குள் மறைந்துகொண்டு
இவர்கள் வாழ்கிறார்கள்
அடையாளங்களைத்
தொலைத்துவிட்டு
எதையோ தேடுகிறார்கள்
புதிய வார்ப்புகளின் பரிமாணங்களில்
தவழ்ந்தபடி முன்னேறுகிறார்கள்
இலக்குகளை கையிலெடுத்தபடி
மெல்ல நடக்கிறார்கள்
விலகிச் செல்லும்
மேகங்களுக்கிடையில்
பிரகாசிக்கும் சூரியனாய் விளங்க
ஆதங்கத்தோடு பயணிக்கிறார்கள்
மற்றவர்களின் நடைபாதைகளைத்
தவிர்த்து
புதிய வழிகளில் பிரவேசிக்கிறார்கள்
விடியல் பறவைகளாய்
தொடுவானத்தில்  இவர்களின்
மனங்கள் மேலெழுகின்றன
நந்தவனத்துப்  பூக்களில் கூட
மகரந்தமாய் வாழத் துடிக்கிறார்கள்
ஓடும் நதி பாடும் குயில்
வீசும் காற்றிலும்
தம்மை  இழத்தலை விரும்புகிறார்கள்
புதிய புதிய அத்தியாயங்கள்
இவர்களது வாழ்க்கைப் புத்தகங்கள்
அங்கீகாரங்கள் எப்போதாவது
முடிசூட்டி மகிழ்விக்காதாவென
மனக்கோட்டைக்குள்
அரசாட்சி செய்கிறார்கள்
படைப்பாளிகளின் உலகில் இவர்களது
எழுத்துகள் சிம்மாசனம்
ஏறுவது எப்போது ?

# நூல் விமர்சனம்:



## நூலின் பெயர்

காலத்தூரிகை
(தன்முனைக் கவிதைகள்)

## நூலாசிரியர்

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு

'முற்றும் துறந்தவரும்
சார்ந்தே இருக்கிறார்
அரையாடை உடுத்தும்
உழவனின் கையை.'

கவிஞர் இந்தத் தன்முனைக் கவிதையின் வாயிலாக வாழ்க்கையின் ஆழமான கருத்தினை வெளிப்படுத்துகிறார். துறந்தவர் ஏற்றத்தாழ்வுகளையும், நன்மை, தீமைகளையும், ஆசை, பாசங்களையும், அக வாழ்வின் எல்லாவற்றையும் விட்டு ஒதுங்கி வாழும் ஞானி. இவருடைய நிலை வாழ்க்கையின் கடைசிப் பிணைப்புக்களையும் துறந்த ஓர் உச்ச நிலையைத் தருகிறது.

ஆனால் அதே துறந்தவர் கூட, ஒரு நிலையில் சார்ந்தே இருக் கிறார் என்பதனூடாகக் கவிஞர் ஆழமான எண்ணத்தைக் கிளப்புகிறார். எதனை அவர் சார்ந்தி ருக்கிறார்? எளிய அரையாடை உடுத்தும் உழவனின் கையை இங்கே உழவன் என்பது வெறும் தொழிலாளியாக அல்ல, வாழ்வாதாரத்தின் தூணாகக் காட்சியளிக் கிறார். உழவனின் கை என் பது உழைப்பின் நேர்மையின், நிலத்தோடு உள்ள உறவின் சின்னமாகத் திகழ்கிறது.

துறந்தவரும் கூட அந்தக் கையைத் தவிர்க்க முடியாத கட்டாயத்தில் இருக்கிறார். இதுவே உழவின் மகத்துவம். உலகம் எத்தனை அறிவியலில் உயர்ந்து இருந்தாலும் அதனைத் தாங்கி நிற்கும் அடித் தளமே உழவுதான் என்பதை கவிஞர் நமக்கு நினைவூட்டுகிறார்.

'உழுவார் உலகத்தார்க்கு
ஆணி அஃ்து தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து'

'துடைத்து எறிந்தாலும்
மீண்டும் ஊஞ்சலாடுகிறது
மூலையில் சிறு ஒட்டடையாய்
உன் நினைவுகள்'

இந்தக் கவிதையில் நெஞ்சைக் கவரும் நினைவுகளை மிகச் சிறந்த காட்சிமயமாக்கலுடன் வழங்கியுள்ளார்

'துடைத்து எறிந்தாலும்' என்ற தொடக்க வரியே ஒரு மனப் போராட்டத்தின் வெளிப்பாடு. நினைவுகளை அகற்ற நினைத்தாலும் அவை மீண்டும் உயிர்ப்பெறும் என்பது நன்றாகத் தோன்று கிறது.

நினைவுகள் ஒருபோதும் அழிவதே இல்லை நம் கால ஓட்டத்தில்

என்றாவது ஒருநாள் நினைவு படுத்திக் கொண்டே இருக்கும்

'மூலையில் சிறு ஒட்டடையாய்' என்பது மிகச் சிறந்த காட்சிப் படையாக அமைந்திருக்கிறது. ஒட்டடையை ஒரு நினைவுச் சின்னமாகப் பயன்படுத்துவது திறமையான புணைவு. மூலையில் இருக்கும் என்பதிலேயே மறைக்கப்பட்ட துக்கம், உள் மனச் சுழற்சி உணர முடிகிறது.

**நினைவோ ஒரு பறவை...**
**விரிக்கும் அதன் சிறகை...**

பறக்கும் அது கலக்கும் தன் உறவை... எனும் திரைப்பாடலை முணுமுணுக்க வைக்கிறது இந்த கவிதை.

**'புண் கொத்தும்**
**பறவையையும் விரும்பியே சுமக்கிறது**
**தன்னின் வலிகளை**
**தாங்கும் எருமை'.**

தன்னை அழிக்கும் அல்லது புண்படுத்தும் ஒன்றைக்கூட விரும்பி ஏற்றுக்கொள்ளும் மனநிலை, ஆழமான தத்துவச் சிந்தனையைத் தூண்டுகிறது மனஉறுதியும், தைரியத்தையும் அதே நிலையில் தன்னைப் பண்படுத்திக் கொண்டு இந்த உலகில் எதிர்த்துப் போராடுகின்ற மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு இந்த உலகத்தோடு வாழப் பழகிக் கொண்ட பல பெண்களின் நிலையை எடுத்துச் சொல்லுகின்றது.

பெண்களின் வலியையும், அவர்களின் மன உறுதியையும், சமூகத்துடன் போராடி வாழும் திறனையும் அழகாகச் சித்தரிக்கிறது.

அன்புச்செல்வி சுப்புராஜு அவர்கள் தன்முனைக் கவிதைகளில் இயைபு வடிவத்தில் எழுதுவதன் மூலம் ஒரு புதிய பாணியை உருவாக்கியப் பெருமைக்குரியவர். இவரது புத்தகத்தில் இடம் பெற்றுள்ள சில கவிதைகள், இயைபு நடையில் எழுதப்பட்டு, வாசகர்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதியும் வகையில் அமைந்துள்ளன.

அத்தகைய கவிதைகளில் ஒன்றை இங்கு ஆய்வு செய்வோம்:

**'கண் சிமிட்டும் நேரத்தில்**
**சரிந்தது மலை**
**அடக்கமான உயிர்களுக்கு**
**ஏது விலை.'**

இந்தக் கவிதை, சமீபத்தில் கேரளாவில் நிகழ்ந்த மாபெரும் நிலச்சரிவுச் சோகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டுள்ளது என நினைக்கிறேன்.

இயற்கைப் பேரிடரால் ஏராளமான உயிர்கள் பறிபோயின; பல குடும்பங்கள் அனாதைகளாகின,

சில குடும்பங்கள் முற்றிலுமாக அழிந்து விட்டன.

இந்த நிகழ்வு, மனித வாழ்க்கையின் நிலையாமையையும், இயற்கையின் முன் மனிதர்களின் ஆற்றலின்மையையும் வெளிப்படுத்துகிறது.

கவிதையின் முதல் இரண்டு

வரிகளான 'கண் சிமிட்டும் நேரத்தில் / சரிந்தது மலை' என்பது, பேரிடரின் திடீர்த் தன்மையையும் அதன் வேகத்தையும் துல்லியமாகச் சித்தரிக்கிறது. இது வாசகர்களை உடனடியாக அந்தச் சோகமான தருணத்திற்கு அழைத்துச் செல்கிறது.

அடுத்து வரும் 'அடக்கமான உயிர்களுக்கு ஏது விலை' என்ற வரிகள், இப்பேரிடரில் பலியானவர்களின் உயிர்களுக்கு மதிப்பு கற்பிக்க முடியாத தன்மையையும் வலியுறுத்துகின்றன. இங்கு 'அடக்கமான உயிர்கள்' என்பது, பெரும்பாலும் எளிய வாழ்க்கை வாழ்ந்த உழைப்பாளிகளையும் சாதாரண மக்களையும் குறிக்கிறது.

கவிஞர் இந்தக் கவிதையில், பாதிக்கப்பட்டவர்களின் பின்னணியை மேலும் விரிவாக்கி, அவர்களது கனவுகளையும் உழைப்பையும் நினைவூட்டுகிறார். தங்கள் குடும்பம் செழிப்பாகவும், வசதியாகவும், நல்ல நிலையில் வாழ வேண்டும் என்று எண்ணி, தொலை தூரம் சென்று கடினமாக உழைத்தவர்கள் இந்த மக்கள். அவர்கள் தங்கள் சொந்த மண்ணில் மாளிகைக் கட்டி, அமைதியாக வாழ வேண்டும் என்று கனவுக் கண்டு அதற்காக உழைத்தனர். ஆனால், அந்த உழைப்பின் பலன் கிடைப்பதற்கு முன்பே, இயற்கையின் சீற்றத்தால் அவர்களது வாழ்க்கை சிதைந்து போனது. இந்தக் கவிதை, அவர்களது உழைப்புக்கும், இழப்புக்கும் இடையேயான முரணை வேதனையுடன் பதிவு செய்கிறது.' இறந்து போன அந்த உயிர்களுக்கு ஏது விலை?' என்ற கேள்வி, இந்தக் கவிதையின் உணர்வு நிறைவாக அமைகிறது. உயிர்களின் மதிப்பைப் பணம் அல்லது பொருளால் அளவிட முடியாது என்பதை உணர்த்துவதோடு, சமூகத்தின் மீதும் ஒரு கேள்வியை எழுப்புகிறது: இத்தகைய பேரிடர்களில் பலியாகும் எளிய மக்களின் உயிர்களுக்கு நீதிக் கிடைக்கிறதா? கவிஞரின் துயரமும், அவர்களது இயல்பான நடையும் இணைந்து, இந்தக் கவிதையை ஒரு ஆழமான உணர்வுப் பதிவாக மாற்றியுள்ளது.

இந்தக் கவிதையின் மூலம், ஒரு சமூகச் சோகத்தை எளிமையாகவும், உணர்வுப் பூர்வமாகவும் இயைபு வடிவத்தில் எழுதப்பட்ட இது, வாசகர்களின் மனதில் நீங்காத தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இது போன்ற பல கவிதைகள் இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

'காலத்தூரிகை' -

தன்முனைக் கவிதைகளின் சிந்தனையூட்டும் பெருமோவியம்.

கவிதை என்பது உணர்வுகளை மட்டுமல்ல, உண்மையையும், சமூக உணர்வையும் சுமக்கும் வார்த்தைப் பயணம். அந்தப் பயணத்தில், 'காலத் தூரிகை' என்ற தன்முனைக் கவிதை நூல் வாசகர்களை எண்ணங்கள் நிறைந்த பாதையில் அழைத்துச் செல்கிறது.

இந்த நூலில் இயற்கையின் அழகுச் சிறப்பாக வர்ணிக்கப்படுவதுடன் புதிய அர்த்தங்களைப் பெறுகின்றன. ஒவ்வொரு படிமமும் வாசகருக்கு மனதுள் காட்சியை உருவாக்குகிறது.

அடுத்துப் படிமக்கருத்துகள் கொண்ட கவிதைகள் இவை வாசகரின் உள்ளம் மீது தாக்கம் ஏற்படுத்துபவை. சுருக்கமான வரிகளில், ஆழமான உணர்வுகளைப் பதித்திருக்கும் பாங்கு, கவிஞரின் நடையில் வெளிப்படுகிறது.

சமூக விழிப்புணர்வைக் கொண்ட கவிதைகள் இந்த நூலில் இருக்கின்றன.

சொல்லாடல்களில் சீரு டைமை, பன்முகத் தன்மை, எளிமையும் ஆழமும் உள்ளடக்கிய நடை இவை அனைத்தும் 'காலத்தூரிகை'யை தனித்துவமிக்கக் கவிதைத் தொகுப்பாக மாற்றுகின்றன.

இந்த நூல் கவிதை நேசிக்கும் ஒவ்வொருவரது புத்தக அலமாரியிலும் இடம்பெற வேண்டிய படைப்பு

இந்த நூலில் 190 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

எழுத்தாளர் அன்புச்செல்வி சுப்புராஜூ தனது தந்தை திரு.அழ. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு இந்த நூலை காணிக்கையாக்கி உள்ளார்.

'மகாகவி' மாத இதழின் ஆசிரியர், உலகத்தமிழ் சிற்றிதழ்கள் சங்கத்தின் தலைவர் தமிழ்ச் செம்மல் வதிலை பிரபா அவர்கள் 'அடர் வனமும் அடர்ந்த காடும்' எனும் தலைப்பில் வசீகரமான அணிந்துரையை வழங்கி உள்ளார்.

திரு. நாகேந்திர பாரதி அவர்களின் 'காலத்தை வென்ற எண்ண தூரிகை' சிறப்பான ஆய்வு கண்ணோட்டத்தோடு கூடிய நற் சிந்தனை வாழ்த்துரையும், 'தன் னைத் தானே வரைந்து கொள் ளத் துடிக்கும் காலத்தூரிகை' எனும் தலைப்பில் ஐக்கூ கவிஞர், எழுத்தாளர் திரு. அனுராஜ் அவர்களின் அழகிய வாழ்த்துரையும், 'ஆழ்மனதில் பூக்கும் சொற்பூக்கள்' எனும் தலைப்பில் நூலேணி பதிப் பகத்தின் பதிப்பாசிரியர் கன்னிக் கோயில் இராஜா அவர்களின் நேச உரையும், நூலாசிரியர் அவர்களின் அன்பு உரையும் இடம் பெற்றுள்ளன.

எழுத்தாளர் அன்புச்செல்வி தேனி மாவட்டத்தின் ஆண்டிபட்டி என்னும் அழகிய ஊரில் பிறந்து, இன்று திருவள்ளூர் மாவட்டத்தின் பட்டாபிராமில் வாழ்ந்து வருகிறார். தன்முனைக் கவிதை இயக்கத்தின் முகமாகவும், அதன் முன்னோடியாகவும் திகழும் இவர், தமிழ் இலக்கிய வானில் நட்சத்திரமாக ஒளிர்கிறார்.

இவரது எழுத்துலகப் பயணம், 29 நூல்களாக விரிந்து, புதுக்கவிதை, குறுங்கவிதை, ஹைக்கூ, ஹைபுன், தன்முனைக் கவிதை, தன்முனைக் கவிதை சாரல், சிறார்களுக்கான பாடல்கள், கதைகள் எனப் பல்

வேறு பரிமாணங்களில் செழுமையாகப் பரவியுள்ளது.

ஒவ்வொரு சொல்லிலும் உயிர்ப்பு ததும்ப, ஒவ்வொரு வரியிலும் உணர்வுப் பொங்க, இவரது படைப்புகள் தமிழ் வாசகர்களின் இதயங்களைத் தொடுகின்றன. இதற்கு மேலாக, பல தொகுப்பு நூல்களைத் தொகுத்து, தமிழ் இலக்கியத்திற்கு அரிய பங்களிப்பை அளித்துள்ளார். இவரது பேனா, வெறும் எழுத்து ஆயுதம் மட்டுமல்ல, அது ஒரு புரட்சியின் தீப்பொறி, ஒரு கனவின் விதை.

அன்புச்செல்வி சுப்புராஜூவின் இலக்கியச் சேவையும், சமூகப் பங்களிப்பும், அவரது அயராதத் தேடலும் உலகால் உயர்வாகப் பாராட்டப்பட்டுள்ளன.

**வேலாயுதம்.ந.**

**சென்னை**



# வாழ்கவே!

இலக்கியத்தின் இனிமையை பலரிடம் கொண்டு சேர்த்திடும் பணியில், ‘முத்தமிழ் கலசம்’ தனது சீரான பயணத்தில் ஐந்தாம் ஆண்டு பூர்த்தியில் கால் பதிப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. ‘முத்தமிழ் கலசம்‘ சஞ்சிகையின் வளர்ச்சியின் பின்னால் ஒரு பெண்ணின் பேருழைப்பு இருக்கிறது. இணை யத்தின் வாயிலாக தொடங்கிய இச்சஞ்சிகையை , இன்று வரை 30 இதழ்களை வெளிக்கொண்டு வந்திருக்கும் பிரதம ஆசிரியை சகோதரி வஃபீராவின் முயற்சி பாராட்டத்தக்கது.

புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தியும், வளர்ந்த எழுத்தாளர்களின் பங்களிப்புக்கு ஆதரவு கொடுத்தும் வரும் இச்சஞ்சிகைக்கு என் தொடர் ஆதரவு எப்போதும் உண்டு .



இலக்கியம் வாழ்க, தமிழ் வளர்க’ என்ற நோக்குடன் தொடர்ந்து வெளிவரும் ‘முத்தமிழ் கலசம்‘ மேலும் வளரவும், இன்னும் பல உச்சங்களை எட்டவும் என் மனமார்ந்த வாழ்த்துகள்!

**மரீனா இல்யாஸ் ஷாபி** - நியூஸிலாந்து

# நாட்டுக்கோழி பிரட்டல்

என்னதான் பிரொய்லர் கோழி இருந்தாலும் நாட்டு கோழியில் இருக்கிற சத்துக்கள் பிரொய்லர் கோழியில் கிடைக்காது. அதனால சத்துக்களுடன் மருத்துவக் குணமும் நிறைந்த நாட்டுக்கோழி, முட்டை இதெல்லாம் நம்ம உணவுல சேர்த்துக்கொள்வது நல்லது.

சளி, இருமல், கால் வலி, மூட்டு வலி, இடுப்பு வலி போன்ற எல்லா பிரச்சினைகளுக்குமே இந்த நாட்டுக்கோழி மிகவும் நல்லது. இந்த நாட்டுக்கோழி சூப், குழம்பு நாட்டுக்கோழி வறுவல், நாட்டுக்கோழி சுக்கா அப்படின்னு நிறைய செஞ்சு இருப்பீங்க. அந்த வகையில நம்ம நாட்டு கோழியை வைத்து வறுத்து அரைத்த மசாலாவை சேர்த்து ஒரு சூப்பரான நாட்டுக்கோழி பிரட்டல் ரெசிபி செய்ய போறோம்.

கமகமக்கும் இந்த நாட்டுக்கோழி பிரட்டல் எல்லாரையும் போட்டி போட்டு சாப்பிட வைக்கும்.

### தேவையான பொருட்கள்

1/2 கி இளசான நாட்டுக்கோழி.
இ றம்பை, கருவேப்பிலை,
1 டீஸ்பூன் சீரகம்.
1 டீஸ்பூன் மிளகு .
15 காய்ந்த மிளகாய் .
2 டீஸ்பூன் பெருஞ்சீரகம் . 2
பட்டை, கிராம்பு,4 ஏலக்காய் 4
அன்னாசி பூ 1
1 டீஸ்பூன் இஞ்சி பூண்டு விழுது
4 டீஸ்பூன் மல்லி
3 தக்காளி
2 பெரிய வெங்காயம் 1/4
டீஸ்பூன் மஞ்சள் தூள்
கொத்தமல்லித் தழை சிறிதளவு
உப்பு தேவையான அளவு
எண்ணெய் தேவையான அளவு



### செய்முறை

ஒரு கடாயில் சீரகம் மிளகு காய்ந்த மிளகாய் மல்லி விதைகள் பட்டை கிராம்பு அன்னாசிப்பூ ஏலக்காய், அனைத்தையும் சேர்த்து நன்றாக வறுத்து ஆற வைத்து அரைத்துக் கொள்ளவும்.

*ஒரு பெரிய கடாயில் எண்ணெய் சேர்த்து பெருஞ்சீரகம்.*

*றம்ப,கருவேப்பிலை சேர்த்து தாளித்துக் கொள்ளவும் பெரிய வெங் காயம் ஐந்து காய்ந்த மிளகாய் சேர்த்து வதக்கவும். தக்காளியையும் சேர்த்து வதக்கிய பிறகு இஞ்சி பூண்டு விழுது சேர்த்து உப்பு மஞ்சள் தூள் சேர்த்து பச்சை வாசனை போக வதக்கவும்.*

*இப்பொழுது நாட்டுக்கோழியை சேர்த்து நன்றாக பத்து நிமி டத்திற்கு மூடிக வதக்கவும். பிறகு அரைத்த பொடியை சேர்த்து ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி 20 நிமிடம்குறைந்த தீயில் வேகவைத்து கொத்தமல்லி இலைகள் தூவி இறக்கினால் சுவையான நாட்டுக்கோழி பிரட்டல் தயார்.*

**ஏ எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்**

***கிண்ணியா***

---



## உயிர்ச்சொல்

உனக்கும் எனக்கும்தான்
அது அத்தனைச்சிறப்பு
ப்ளோட்ஸ்களின் உணவுச்சங்கிலியில்
’ழ’ ஆவதில்லை அடேலிகளும் பேரரசுகளும்
அறிந்திருப்பாளா மேரி அனிங் இப்போதும்
கடற்கரைகளில் அரிவைகள் அலைகிறார்கள்
கையில் சிப்பிகளைச் சுமந்தபடி என்பதை

குக்கூஸ்களின் கிளைகளெல்லாம்
சிட்டுக்குருவியின் வினை எச்சங்களென
அறிந்திருப்பதில்லை  நிழல் பருகும் தாமரைகள்
பேருண்மை யாதெனில்
வலசைபோகும் அல்பட்ராஸ்களுக்கு
சிறுகுச்சிகளே பெருஞ்சமாதானம்

அப்படியாகவே, உன் உதடுதிரும்
நல்லாருக்கியா எனும் உயிர்ச்சொல்லும்

**இனியவன் காளிதாஸ்**

# அழுவதற்கு நேரம் இல்லை

றஹீமா இன்ஷார்
மீராவோடை

கிழக்கு வான் இன்னும் வெளுக்கவில்லை. இருள் சூழ்ந்து கிடக்கிறது. பறவைகளின் ரீங்காரம், சுப்ஹ் அதான் சுஜானா வின் செவிகளை சீண்ட சீக்கிரமாய் எழுந்து சுபஹ் தொழுகை முடித்து சமையல் அறைக்குள் நுழைந்தாள்.

'சுஜா டீ' -தொழுகை முடித்து வந்த கணவன் றமீஸ் குரல் அது. 'இருங்க டீ ஊத்திட்டிருக்கன்' என்றவள் அப்பத்துடன் டீயை நீட்டினாள்.

'உம்மா... உம்மா... என்ட பிரஸ்ஸ காணல' சிறிய மகனின் குரல் ஓங்கி ஒலித்தது. 'உம்மா என்ட யூனிஃபமைப் பாருங்க நல் லாவே அயன் பண்ணிப்படல '-மூத்த மகளின் சிணுங்க. 'சரி வாறன்,செய்றன் 'குரல் கொடுத்த படி ஓடி ஓடி வேலைகளை முடித்து பிள்ளைகளை ஸ்கூல் அனுப்பி விட்டு கணவன் பக்கம் திரும்பினாள். சுயாதீன செய்திப் பார்வையில் சுயாதீனமாய் மூழ்கிக் கிடப்பது தெரிய 'என்ன வேலைக்குப் போற ஐடியா இல்லயோ' களைப்பு மறந்து ஒற்றை புன்னகையுடன் கேட்க 'சீக்கிரமாய் வாரன் டவலத் தாங்க' என நடந்தான்.

அத்தனையும் முடிந்து சுஜானா வும் வேலைக்கு செல்ல தயாராக போது அவளின் டீ கப் குளிர் பானமாகி அவளைப் பார்த்து சிரித்தது. அவளும் வலி கலந்த புன்னகையுடன் ஒபீசை நோக்கி விரைந்தாள்.

கைவிரல் அடையாளம் நேரம் தாண்டியதை காட்டியது. யாரிடம் சொல்வது மனதிற்குள் அழுத படியே மேசையில் கைப்பையை எறிந்து விட்டு அமர்ந்தாள். அவளுக்கு முன் பைல்கள் குவிந்து கிடந்தன அத்தனையையும் சரி பார்த்து முடித்து மாலை வீடு திரும்ப தயாரான போது அங்கு வந்த மெனேஜர் 'மேடம் நாளைக்கு முக்கியமா இந்த பைல கிளியர் பண்ணி அனுப்பனும்' என நீட்டினார். நிலைமை புரிந்து அப்படியே அமர்ந்தாள்.

நேரம் தாண்டியது. 'என்ன இன்னும் வேலை முடியலியா நாங்க டீ கூட இல்லாமல் கிடக்கம்' கணவனின் போன். 'சீக்கிரமா வாறன். கட் பண்ணி விட்டு அவசரமாக வெளியானாள்.

மாலை வேலை மலிந்து கிடக்கும் என்பது உணர்ந்து வொஷ் எடுத்து டீ சிற்றுண்டி கொடுத்து பசியை ஓட்டினாள். கொஞ்சம் அமரலாம் என வந்தவளிடம் 'நான் வெளிய போக வேண்டி இருக்கு என்ட ட்ரெஸ்ஸ அயன் பண்ணிட்டு, கொஞ்சம் எக்ஸாம் பேப்பர் இருக்கிறது திருத்தி வைங்க' கண வனின் அன்பு கட்டளை அது.

மீண்டும் ஒவ்வொரு குரல் ஒலிக்க பம்பரமாக சுழன்று சோர்ந்து போய் சற்று சாய்ந்து கொள்ளும் போது போன் ஒலிக்கும் சத்தம். கல்லூரி தோழி தன்னை மறந்து பேசிக் கொண்டிருந்தாள்.

நேரம் உருண்டது. இரவு சமை யல் பத்து மணியைத் தாண்டி விட்டது. உடலும், உள்ளமும் சோர்ந்து போக, தாயின் நினைவு கள் நிழலாடின. அவளுக்கு பாதிப் பலம் தாய் தான். அவர் மரணம் சுஜானாவின் சுமைகளை அழுத் தியது. கண்கள் கண்ணீர் சொரிந்து கொண்டிருக்கும் போது ‘உம்மா பசிக்குது‘ தூக்கம் சுழலும் கண் களோடு மகன் வந்தான். கண் ணீரை அவன் காணாத படி துடைத்து விட்டு உணவை ஊட்டி விட்டு மற்றவர்களுக்கும் பரிமாறினாள்.

அவள் ஏதோ பேருக்கு கொறித்து விட்டு எழுந்தாள். உள்ளம் ரணமாகி மௌனமாகி அழுதது.

அத்தனையும் முடிந்த திருப்தி யில் தலையணையில் நடைப் பிணமாய் தலை வைத்தாள். தன் வேலை, கவலை,காயங்கள் எதனை யும் பகிர்ந்து கொள்ள உறவுகள் இல்லையே என்ற வலி கனக்க, தனக்குள் அழத் தொடங்குகையில் ‘சுஜா தூக்கமா‘ கணவன் குரல் கேட்டு கண்ணீரில் கரைந்த கண் களை மூடிக்கொண்டு ‘இல்ல‘ என ஒற்றை வார்த்தையில் அவன் பக்கம் திரும்பினாள்.

அவளது அழுகையும் அப்ப டியே அடங்கிப் போகின்றது.

# அப்படித்தான் அவர்கள்

விரும்பியதை
இறுகப் பற்றிக் கொண்டாலும்
நலவுகள் இருந்தால் தான்
நம்முடனே நிலைக்கும்.

தொலைந்து போவதை
அதன் போக்கிலே விட்டு விடு
வந்தடைவது வந்தே தீரும்.

ஒன்றின் இருப்பிடத்தை
முழுதாய் நிரப்ப
வெற்றிடம் என்பது
நிச்சயம் தேவை தானே
இதயங்களைப் புண்படுத்தா
ஜீவன்களெல்லாம்
புவனத்தில் மலர்ந்திடும்
பூவிதழ்களின் சாயல்
சத்தியங்களை சாதாரணமாய் மீறி
சந்தர்ப்பங்களோடு
சதிராடும் உறவுகளோ
சாத்தானின் சாயல்

அவர்கள் அப்படித்தான்
அப்படியே விட்டு விடுங்கள்.
யாரோ எப்படியாவது
இருந்துவிட்டு போகட்டும்.
நீ நீயாகவே
உண்மையாக இருந்துக்கொள்

**முபீதா அமீன்**
அக்கரைப்பற்று

# வாழ்த்துச் செய்தி

முத்தமிழ் கலசம் சஞ்சிகை தனது ஐந்தாண்டு இலக்கியப் பயணத்தை நிறைவு செய்து வெளியிடும் சிறப்பிதழுக்காக வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இணையவழியில் தொடங்கிய இந்தக் கலை இலக்கிய இதழ், 2022 ஆம் ஆண்டு ஜனவரியில் அச்சு வடிவில் வெளியானது. இன்றோ, ஐந்து ஆண்டுகளைச் சிறப்பாக நிறைவு செய்யும் தருணத்தில், இது ஒரு தரமான இலக்கிய முயற்சியின் மகத்தானச் சாதனை என்றே சொல்லலாம்.

இசை, இலக்கியம், நாடகம் என முத்தமிழின் மூவகைச் செல்வங்களையும் உள்ளடக்கிய இந்தச் சஞ்சிகை, தமிழ் வாசகர்கள் மனதில் தனித்த இடம் பிடித்து, புதிய எழுத்தாளர்களுக்கான களமாக உருவெடுத்து, அவர்களது திறமைகளை வெளிப்படுத்தும் வழி காட்டியாக திகழ்ந்து வருகிறது. மூத்த படைப்பாளிகள், கலைஞர்கள், அறி ஞர்கள், ஆசிரியர்கள் என பலரின் பங்களிப்புகள் இந்தச் சஞ்சிகையை ஒரு சிறந்த கலாச்சாரப் பாலமாக உருவாக் கியுள்ளது.



**ஜே.எம்.பாஸித்**
பணிப்பாளர் - ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை

தங்களது எழுத்தாற்றல், ஆசிரியத் திறமை மற்றும் அர்ப்பணிப்புடன் இவ்விதழை சிறப்பாக வழிநடத்தும் பிர தம ஆசிரியர் சித்தி வஃபீரா, சிறப்பாசிரியர் தமிழ்நெஞ்சம் அமின், மற் றும் ஆசிரியர் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றியையும் வாழ்த் துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தமிழின் முத்துக்கள் மலர, இலக்கியத்தின் இலைகளில் இன்ப மழை பொழிய, முத்தமிழ் கலசம் இதழ் இன்னும் பல பெரும் இலக்கிய சாத னைகளைப் பெற, என் இதயப்பூர்வமான வாழ்த்துக்களையும் பிரார்த் தனைகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# வாழ்த்துரை



தேசமான்ய, தேசகீர்த்தி
**கவிஞர்- ஃபஹ்மி ஹலீம்தீன்,**
தலைவர் - தமிழ் மன்றம்,
கல்ஹின்னை.

புத்தகங்களை மட்டுமல்ல பத்திரிகைகளைக் கூட வாங்கிப் படிக்கும் வாசிப்புப் பழக்கம் அருகி விட்டதென்பதைக் காட்டிலும் அற்றுப் போன ஒரு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வாசிப்பதால் அறிவு வளர்கிறது, வாசிப்பு ஒரு மனிதனை முழுமை பெறச் செய்கிறது என்று வாசிப்பை நேசிப்பவர்களின் அனுபவப் பேச்சுகளைக் கேட்டிருக்கிறோம். அதை ஆவன செய்வதில் தான் மனிதன் ஆர்வமின்றி இருக்கிறான்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் சிறப்பான பல ஆக்கங்களைச் சுமந்து ஐந்தாண்டுகளாக வாசக நெஞ்சங்களை ஈர்த்து வெற்றி நடை போடுகிறது 'முத்தமிழ் கலசம்'. அச்சுப் பிரதிகளை விரும்புவோருக்கு அச்சுப் பிரதிகளாகவும், இணையத்தில் வாசிக்க விரும்புவோருக்கு மின்னிதழ் சஞ்சிகையாகவும் வாசிப்போரின் வசதிக்கேற்ப அழகான முறையில் வாசகர்களைத் திருப்திப்படுத்தி வருகிறது.

சிறந்த ஆளுமைகளை இனம் கண்டு அவர்களது ஆக்கங்களைப் பிரசுரிப்பது மட்டுமன்றி வளர்ந்து வரும் எழுத்தாளர்களையும் ஊக்குவித்து அவர்களுக்கான ஒரு சிறந்த களமாகவும் 'முத்தமிழ் கலசம்' அதன் இலக்கியப் பணியை செய்து வருகிறது.

முத்தமிழையும் முழுதாய்ச் சுமந்த முத்தான ஒரு தமிழ் சஞ்சிகையாக 'முத்தமிழ் கலசம்' முழு உலகின் தமிழ் பேசும் நெஞ்சங்களில் முத்திரையாகப் பதிய வேண்டும் என்று வாழ்த்துவதோடு, சளைக்காமல், சலிக்காமல் முத்தமிழ் கலசத்தை ஒரு சிறந்த சஞ்சிகையாக அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் அதன் ஆசிரியரையும் பாராட்டுவதில் அகமகிழ்கிறேன்.

# முத்தமிழை மேலும் முழங்க செய்தவள் நீ!

மூவெழுத்து கோர்த்து முத்துக்கள் சேர்த்து
முத்தமிழாய் வளர்ந்து முழங்கிடும் மலரை
மனதார வாழ்த்துகிறேன்
ஐவருடமாய் அவனியில் அசை போட்டு
மகிழும் பல்லாயிரம் மக்களின் இதழாய்
திகழும் முத்தமிழ் கலசம் முழங்க வேண்டுகிறேன்
எழுத்துக்களின் களமாய்
கருத்துக்களின் தளமாய் காலடி எடுத்து வைத்து
காரியங்கள் நிறைவு செய்தாய்
வீரியமாய் உன்னத சேவை ஆற்றியே!

வாசகர்களின் தேடலானாய்
வசனங்களின் கூடலானாய்
வர்ணனையின் உடலானாய் வாடலற்று
வளர்ந்து பெரும் மகான் ஆனாய்
களம் கேட்டு கை நீட்டுபவரிடம்
வளம் கொடுத்து அரவணைத்தாய்
பல நூறு எழுத்தாளர்களின் படைப்புகளை
கலக்கமின்றி உன்மீது ஆதரித்தாய்

இரு மாதத்திற்கு ஒருமுறை மிளிர்ந்து
மக்களின் மத்தியில் ஒளிர்ந்த உனை
மனதார இன்று வாழ்த்தி ஐவருட பூர்த்தியைப் புகழ்கிறேன் -
உனை இன்று கவியால் சூடி அகமகிழ்கிறேன
என் கையதில் பேனை தந்தாய் பக்குவங்கள் ஊட்டி உன் மீது
எழுத வழி செய்தாய் படைத்ததெல்லாம் பாராட்டினாய்
பருவங்கள் மாற கவிஞராய் எனை விம்பம் காட்டினாய்

முத்தமிழ் கலசமாய் முப்பது இதழ் கொண்டு
முழுமையாய் ஜொலிக்கிறாய்
மென்மேலும் திறமைகளால் தடம் பதித்திட பிரார்த்திக்கிறேன்
மனதார உனை கவியால் வாழ்த்துகிறேன்

**றீனத் றாசிக், - நீந்தவூர்.**

# கலைச்சுடர் இலக்கிய மன்றத்தின் ஒன்று கூடலும் கவியரங்கும்



கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 'கலைச்சுடர்' இலக்கிய மன்றத்தின் ஒன்றுகூடலும், கவியரங்கும் 17/4/2025 திகதி வியாழக் கிழமை, பிற்பகல் நான்கு மணியளவில் கிண்ணியாவின் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில், கிண்ணியாவின் பிரதேச செயலாளர் ஜனாப் M.H.M கனி அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிண்ணியாவின் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி, முனவ்வரா நளீம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்.

நிகழ்வில் 'கலைச்சுடர்' இலக்கிய மன்ற நிர்வாகிகள், உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவிகள், கல்விக் கல்லூரிகளில் கற்கும் மாணவர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள், எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலாளர், ஜனாப், M.H.M கனி அவர்களின், தலைமையுரையைத் தொடர்ந்து, கல்வியியலாளர் ஜனாப் R சதாத் அவர்களின் வரவேற்புரை இடம் பெற்றது.


மாணவச் செல்வங்களின் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து சிறப்பு அதிதியும், இந்தக் கலை மன்றத்தினைக் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தில், பதிவுசெய்வதற்காக முன்னின்று உழைத்தவருமான, திரு K.அன்பழகன் அவர்களின், சிறப்புரையும் இடம்பெற்றது. அடுத்து ஒய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி கலாபூஷணம் பத்தக் குட்டி மதிபாலா சிங்கம் ஐயா அவர்களும் கவி பாடியோரின் திறமைகளைப் பாராட்டி வாழ்த்தினார்.



கவியரங்கு நிகழ்வுக்கு, 'கலைச் சுடர்' இலக்கிய மன்றத்தின் ஸ்தாபகத் தலைவியான கலாபூஷணம் திருமதி சித்தி சபீனா வைத்துள்ளாஹ் (கிண்ணியா சபீனா) தலைமை தாங்கினார். கிண்ணியாவின் பல பாடசாலைகளின் அதிபர் மற்றும் பிரதி அதிபர்கள் எனக் கடமையாற்றும் பெண்மணிகள் பலரும் கலந்து கொண்டு இங்கு கவி பாடினர்.

நிகழ்ச்சியின் நிறைவாக 'கலைச் சுடர்' மன்றத் தலைவி தனது நன்றியுரையில் நிகழ்வுக்குக் களம் தந்துதவிய கிண்ணியாவின் பிரதேச செயலாளருக்கும், பிரதேச செயலகத்துக்கும், மற்றும் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். விழா மிகவும் சிறப்பாக நடைபெற்று நிறைவு பெற்றது.





# கனவு (சிறுகதை)

**முனைவர் நா. அமுதா தேவி**
உதவிப்பேராசிரியர்
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோவை

‘கண்ணா இங்க வாப்பா‘

‘சொல்லுங்க அப்பா’ ‘இந்த மாசத்தோட உன் படிப்பு முடியப் போகுது அடுத்து என்ன செய்யலாமுனு இருக்க தம்பி’ அப்பா மூர்த்தியின் கேள்விக்கு சுந்தர் ஆர்வ மாக பதில் அளித்தான்.

‘அப்பா நான் வந்து இன்னும் ஒரு வருசம் சி. ஏ படிப்பு படிக்க லாம்னு இருக்கேன்‘

‘அப்படியா பா அதுக்கு எவ்ளோ ஃபீஸ் ஆகும் பா‘

‘அப்பா எக்ஸாம் ஃபீஸ் இரு பத்து ஆறாயிரம் ஆகும் பா அதுக்கு தனி கோச்சிங் கிளாஸ் போகனும் அதுக்கு 65 ஆயிரம் ஆகும் பா‘

அப்பாவின் முகத்தில் சிந்தனை ரேகைகள் முடிச்சிட்ட போதிலும், புன்னகையை வரவழைத்து

‘அப்டியா சரி நா என்னால எவ்ளோ முடியுமோ அவ்ளோ முயற்சி பண்ணி உன்ன படிக்க

வைக்கிறன். படிப்பு ஒன்னுந்தான் உன் சொத்து. படிப்பு இல்லாம நான் ரொம்ப கஷ்டபடரேன். அது உனக்கு நல்லா தெரியும். நல்லா படிச்சுக்கப்பா' என்று தட்டிக் கொடுத்தார் மூர்த்தி. 'சரிங்க அப்பா' என்று சொல்லி சுந் தர் படிக்கத் துவங்கினான்.

நாட்கள் வேகமாக சென்று கொண்டு இருக்க, இறுதித் தேர் வும் நெருங்கி வந்தது. இன்னும் இருபத்தையாயிரம் ரூபாய் கட் டணம் வேறு செலுத்த வேண்டும். அப்பாவிடம் எப்படிக் கேட்பது என்ற நெருடல் சுந்தருக்கு. பொழுது விடிந்தது. அவன் வங்கிக் கணக்கில் 25ஆயிரம் அப்பா செலுத்தி இருந்தார். மீதம் உள்ள தொகையினை செலுத்தி விட்டு தேர்வுக்கு படித்துக் கொண்டு இருந் தான். நாளை மறு நாள் தேர்வு அறை நோக்கி செல்லும் காட்சியை கனவாக நினைத்துக் கொண்டு இருந் தான் சுந்தர். தேர்வுக்கு தன்னைத் தயார் செய்து கொண்டு எல்லாத் தேர்வுகளையும் நன்கு எழுதிவிட்டு அப்பாவைக் காண ஆவலுடன் ஊருக்கு செல்கிறான். அப்பா அவனை வரவேற்கிறார்.'

என்னப்பா எப்படி தேர்வு எழு திருக்க' என்று கேட்டார். 'நல்லா பண்ணிருக்கன் பா என்று சொன் னாலும் உள்ளூர ஒரு கலக்கம் தேங் கத்தான் செய்தது. அப்பாவோ உற்சாகத்துடன்

'சரிப்பா அம்மா அக்கா எல்லாரும் உனக்காக காத்துக் கொண்டு இருக் காங்க. போய் பாருப்பா' என்றார். அடுப்படியில் வேலை செய்து கொண்டிருந்த அம்மா வெளியில் வருகிறார். சுந்தரின் கைகளைப் பிடித்த படி 'வா தம்பி நல்லா படிச்சு நம்ம குடும்பத்தை நீ தான் இனி காப்பாத்தனும்' என்று சொன்னார். தேர்வு முடிவு வெளிவருவதற்கு ஒரு சில நாள் மட் டும் இருந்தது.'அப்பா இப்போ எல்லாம் நீங்க ஏன் கச்சேரிக்கு போறது இல்லை உங்க தவில் என்ன ஆச்சு' என்று கேட்க, 'அது ஒன்னும். இல்ல பா! அதுல கொஞ்சம் பிரச்சினை அதுதான் சரி பண்ண கொடுத்து இருக்கேன்' என்றார்.

அப்பா சிறுவயதில் தொழில் கற்றுக் கொண்டது முதல் ரொம்ப ஆசையாக வச்சு இருந்த தவில் அது என்று கடந்த கால நினைவில் மூழ்கிப் போயிருந்தான் சுந்தர். தேர்வு முடிவு இணையத்தில் வெளியானது. சுந்தர் நல்ல. மதிப் பெண் பெற்று சிஏ தேர்வில் வெற்றி பெற்று இருந்தான். அனை வரும் அவனுக்கு வாழ்த்து சொன் னார்கள். சுந்தர் தனது முதல் மாத வருமானத்தில் அப்பா அடமானம் வைத்த தவிலை மீட்டு அவருக்கு கொடுத்ததும் அப்பாவுக்கு கண் களில் அதிர்ச்சியோடு, ஆனந்தக் கண்ணீரும் நிறைந்து இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவிக் கொண்டு கண்ணீரால் அன்பை வெளிப்படுத்தினார்கள்.

இதுபோன்று புரிந்துணர்வு இருக் கும் குடும்ப உறவுகள் உள்ளவரை அன்பும் நேசமும் ஆல்போல் உறுதி பெறும்.

# குடும்ப வாழ்வில் ஆண்கள் எதிர் கொள்ளும் சவால்களும் தீர்வுகளும்

இறைவனின் படைப்பினங்களில் முதன்மையானதும் மகத்தானதுமான படைப்பினமாக மனித படைப்பு காணப்படுகின்றது. அகிலத்தின் ஆட்சியாளனின் படைப்புக்களில் ஆண் பெண் பாலின தனித்துவம் தலைசிறந்து காணப்படுகின்றது. மனிதப் பிறவிகளின் தனித்துவமானவனாக காணப்படும் ஆண்களும் பெண்களைப் போன்று பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு பாத்திரங்களாக வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டங்களிலும் சிறந்து விளங்குகின்றனர். சிறு வயது முதல் குடும்பத்தின் தலைவனாக மாறும் வரை ஓர் வித சவால்களையும் அவன் குடும்பப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் இன்னுமோர் விதமான சவால்களையும் எதிர் கொள்கின்றான். காலப்போக்கில் குடும்பத் தலைவனாக ஓர் ஆண் மாறியதன் பின்னர் முதலில் அவனின் சுதந்திரம் மறக்கடிக்கப் படுகின்றது. பொதுப் பார்வையில் பார்த்தோமானால் ஒரு குடும்பப் பொறுப்பை ஏற்கின்ற பெண்ணின் சுதந்திரம் தான் பறிக்கப்படுவதாக பல கருத்துக்கள் வெளிவருவது பழகிப்போனதே. உண்மையில் பெண் ஒரு புறம் இருக்க ஆணின் சுதந்திரமும் அங்கே கேள்விக்குறியாகத்தான் இருக்கின்றது. சுமைகளால் அலங்கரிக்கப்பட்டவனாக ஒரு ஆண் மாறுகின்றான். சிலபோது அவனின் ஆசைகளும் எதிர்பார்ப்புக்களும் முடங்கிப் போகின்றமைக் கான சந்தர்ப்பங்களும் நிலவுகின்றன. மனைவி, பிள்ளைகள், வேலைப் பளு என்றெல்லாம் அவனின் வாழ்நாட்கள் வெகு சீக்கிரமாக விரைந்தோடுகின்றன. ஒரு ஆண் எவ்வகையான சவால்களை எதிர்கொண்டாலும் அவை எல்லாவற்றுக்குமான தீர்வுகளும் அவனின் மத்தியில் விடப்பட்டிருக்கும். இருந்தும் அவற்றையெல்லாம் அறிந்திடா தவனாக சில சமயங்களில் காணப் படுகின்ற போது அவ்வாறான சவால்களை எதிர்கொள்ள சிரமப் பட்டு வருகின்றான்.

சூரா பகராவில் பின்வருமாறு அல்லாஹ் கூறுகின்றான்'

எவரையும் அவரது சக்திக்குட் பட்டே தவிர அல்லாஹ் சிரமப் படுத்தமாட்டான் '

( 2:286)

ஆலமரம் போன்று நிழல் தரக் கூடிய ஆண் மகனே அயர்ந்து கொள்ளும் சந்தர்ப் பங்களில் அவனின் சில எதிர்மறை சிந்தனை கள், திருப்தியின்மை, அமைதி யின்மை போன்ற விடயங் களும் உளரீதியாக அவனைப் பாதிக் கின்றன. மனைவி, பிள்ளைகள் என்று வரும் போது அவர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய பொறுப் புக்கள் மற்றும் கடமைகளை ஏற்கின்ற நிலைமைகளில் அவனின் சவால்கள் ஆரம்ப மாகின்றன.

வேலைப்பளுக்களைப் பொறுத்தவரையில் அவனின் நிலை அதனை நம்பியதாகவே காணப் படுகிறது. அவனை நம்பியிருக்கும் குடும்பத்தின் நிலையும் இதனை பொறுத்தே காணப்படும். அத் தனை சூழ்நிலைகளையும் கடந்து வரும் ஆணின் ஆறுதலாக எப்போ தும் பெண் என்பவள் காணப் படுகின்றாள்.

ஒவ்வொரு ஆண்மகனும் எதிர் கொள்ளும் சவால்கள் எண்ணற் றவை. சவால்களாக அவன் எதிர் கொள்கின்ற ஒவ்வொன்றும் காலம் செல்லச் செல்ல அவனின் பழக்கத்திற்கு ஏற்றாற் போல் மாற்றமடையும் சந்தர்ப்பங்களில் அவை அனைத்தும் அவனால் முறியடிக்கப்படுகின்றன. மண்ணில் போடப்பட்ட விதை யானது மண்ணைப் பிளந்து கொண்டு வேராக ஊடுரு வுவதும் அதே வீச்சில் மரமாக வெளிவருவதும் அந்த சிறுவிதை யின் சவால்களே. ஒவ்வொரு ஆடவனின் சவால்களும் இதனை ஒத்ததாகவே காணப்படுகின்றது. எவ்வகையான சவால்களையும் அவன் எதிர்கொள்கின்ற போது அதில் பெண் பங்கு கொள்கின்ற சந்தர்ப்பமாக இருந்தாலும் அவை களை எதிர்கொள்கின்ற கட்டா யத்தில் அவனின் நிலைமை காணப்படுகிறது. இறைவனின் படைப்பு களுக்கு எவ்வித ஏற்றத் தாழ்வுகளோ அல்லது ஏதும் சவால்களோ அவர்களை சூழ்கின்ற வேலைகளில் படைத்தவனிடம் மாத்திரமே அவை அனைத்தையும் பொறுப்புச் சாட்ட முடியும். அதே நேரம் மனதில் உறுதியும் துணிவும் கொண்டு எதையும் சமாளிக்கக் கூடிய சாமர்த் தியமும் இருந்துவிட்டால் அவனே வாழ்க்கையை வெற்றி கொண்ட வனாக மிளிர்கிறான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார் கள்: இறைவனுக்கு மிகப் பிடித்த மானவர் தன்னுடைய ஆசை களையும் சோதனைகளையும் சமாளிக்கும் அந்த மனிதர் ஆவார்.

(திர்மிதி:1621)

**பா.ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்**
(இஸ்லாஹி) புல்மோட்டை


COST OF LIVING
SRI LANKA
Jan 2022
Nov 2024
Coconut (Avg.) Rs./Nut 85.00 Rs./Nut 165.00
Coconut oil Rs./Ltr 648.00 Rs./Ltr 741.00
Sugar (White) Rs./kg 138.00 Rs./kg 260.00
Egg (White) Rs./Each 21.00 Rs./Each 35.00
Source: Central Bank, Sri Lanka
If you had Rs. 100 in 2022, you could have purchased 1 coconut. How many can you purchase with Rs. 100 now?
If this is the fate of a simple household item, what about larger expenses?
Education
Home purchase
Weddings
Surgeries
Does your savings plan consider inflation?
Retirement
Vehicle purchase
Debt reduction
Investment plans starting from Rs. 6,000 per month.
0% interest installments from all leading banks.
FREE CONSULT
LETS CHAT NOW
+94776029933
nuhamilan.o@gmail.com
NUHA MILAN
Licensed Wealth Planner, Sri Lanka
(RG146 compliant, Australia)


ROYAL BURGER
ONE STOP FOR THE BURGERS & PASTA...
314 D Havelock roadColombo 5 T.P. 0112506090
85 Elvitigala mawathaColombo 8 T.P. 0112696009
123 Deans roadColombo 10 T.P. 0112056410
Burger
Submarine
Rice
Pasta
Koththu